பக்கங்கள்:12 விலை : 30/-

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 06 வள்ளுவர் ஆண்டு 2053 மாசி 13 வெள்ளிக்கிழமை 25.02.2022 கதிர் 112

இனி இது ரகசியம் அல்ல!

ஊடக நண்பர் நிலமராஜன் படுகொலைச் சம்பவம் தொடர்பாக ஈ.பி.டி.பியில் இருந்த நெப்போலியனை யுத்தக் குற்றச் சாட்டில் லண்டன் மெட்ரோ பொலிட்டன் பொலிஸாரின் யுத்தக் குற்ற விசாரணைப் பிரிவு கைது செய்திருக்கின்றமை

☞2



# தமிழரின் நிலங்களை அபகரிப்பதை நிறுத்து

## ஜனாதிபதி செயலகத்துக்கு முன் எம்.பிக்கள் போராட்டம்

காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியக் கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் நேற்று போராட்டத்தில் ஈடுபட்டனர்.

(விரிவான செய்தி 06ஆம் பக்கத்தில்...)

# ஈ.பி.டி.பி. 'நெப்போலியன்' போர்க்குற்றச்சாட்டில் கைது

## இலண்டனில் பொலிஸார் அதிரடி

ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் பிரதான சந்தேகநபரான முன்னாள் ஈ.பி.டி.பி. உறுப்பினர் நெப்போலியன் எனும் செபஸ்டியன் ரமேஷ், அந்தக் கொலை யுத்தக் குற்றம் என்ற அடிப்படையில் லண்டன் பொலிஸாரால் கடந்த செவ்வாய்க்கிழமை (22ஆம் திகதி) கைதுசெய்யப்பட்டுள்ளார்.

இந்தக் கொலை விசாரணை தொடர்பில் பயனுள்ள தகவல்கள் தெரிந்தவர்கள் அவற்றைத் தந்துதவ வேண்டும் என லண்டன் மெற்றோபொலிட்டன் பொலிஸின் யுத்தக் குற்ற விசாரணைப் பிரிவு பொதுமக்களிடம் பகிரங்கக் கோரிக்கை விடுத்திருக்கின்றது

☞2



## பயங்கரவாதத் தடைச் சட்டத்துக்கு எதிராக பருத்தித்துறையில் கையெழுத்து வேட்டை



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்குமாறு கோரி பருத்தித்துறையில் நேற்று கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

பருத்தித்துறை பஸ் நிலையத்தில் நேற்றுக் காலை இலங்கைத் தமிரசுக் கட்சியின் வாலிபர் முன்னணியின் ஏற்பாட்டில் இந்தக் கையெழுத்து வேட்டை முன்னெடுக்கப்பட்டது.

இதில் பருத்தித்துறை நகர சபைத் தலைவர் யோ.இருதயராஜா, பருத்தித்துறை பிரதேச சபை தவிசாளர்

☞10

## வீட்டில் மறைத்து வைக்கப்பட்டிருந்த ஐந்து அரிய வகை ஆமைகளை மீட்பு



(ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், பெப்.25

அரிய வகையைச் சேர்ந்த ஐந்து ஆமைகளைப் பிடித்து மன்னாரில் ஓர் வீட்டில் மறைத்து வைத்திருந்தபோது, பொலிஸார் அவற்றை மீட்டு வன ஜீவராசி திணைக்களத்திடம் ஒப்படைத்தனர்.

அரிய வகையான 5 ஆமைகளை

☞10

## யாழில் ரயில் மோதி இளம் பெண் மரணம்

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்., கொக்குவில் ரயில் நிலையத்துக்கு அருகில் ரயில் மோதி 22 வயதான இளம் பெண் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்.காங்கேசன்துறையிலிருந்து கொழும்பு

☞10

## நாடாளுமன்றத்துக்குள்ளும் தமிழ் எம்.பிக்கள் போராட்டம்



பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே என நாடாளுமன்றத்துக்குள் கோம் எழுப்பியும், பதாகைகளை ஏந்தியவாறும் ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வடக்கு, கிழக்கில் தமிழ் மக்களின்நிலங்கள்பறிக்கப்படுவதற்கு எதிராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணி ஆகியவற்றின் எம்.பிக்கள் சபைக்குள் நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நாடாளுமன்றத்தில்

☞10

# உக்ரைன் மீது ரஷ்யா போர்!

## நகரங்கள் மீது குண்டு வீச்சு



ரஷ்ய ஜனாதிபதி புடினின் உத்தரவைத் தொடர்ந்து உக்ரைன் தலைநகர் கீவ் மற்றும் கிழக்கு உக்ரைனின் டோனட்ஸ்க் உள்ளிட்ட நகரங்களை ரஷ்யப் படைகள் தாக்க ஆரம்பித்துள்ளன.

உக்ரைனின் பல நகரங்களில் ரஷ்ய படைகள் குண்டு மழை பொழிகின்றன என்று சர்வதேச ஊடகங்கள் தெரிவிக்கின்றன.

கிழக்கு உக்ரைனின் முக்கிய நகரங்கள்

☞10



## இனி இது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

தமிழர் தரப்பு அரசியலில் சத்தம் சந்தடியின்றி பரபரப்பை ஏற்படுத்தியிருக்கின்றது.

யுத்த காலத்தில் அரசுப் படைகளுக்கு எதிராக யுத்தக் குற்றங்கள், மனித குலத்துக்கு எதிரான கொடூரங்கள், மனித உரிமை மீறல்கள் போன்ற குற்றச்சாட்டுகள் சுமத்தப்பட்டிருக்கின்றமையால், இந்தக் கைது நடவடிக்கை படைத்தரப்புக்குக் கிலியை ஏற்படுத்தியிருக்கும் என்று புலம்பெயர் தேசத்திலிருந்து தொலைபேசி மூலம் உரையாடிய நண்பர்கள் தெரிவித்திருந்தனர்.

ஆனால் நிலைமை அதுவல்ல. யுத்தக் குற்றங்களுக்கு நேரடியாக இலக்காகக் கூடிய படைத்தரப்பின் உயர்மட்டங்கள் பெரும்பாலும் உள்நாட்டில்தான் இருக்கின்றன. அவற்றுக்கு உடனடிச் சிக்கல் ஏதுமில்லை.

தமிழர் தரப்பில்தான் இத்தகைய சிக்கல்களில் மாட்டக் கூடிய பலரும் வெளிநாடுகளில் தஞ்சம் புகுந்திருக்கின்றார்கள். யாருக்கு எதிராகவும், எந்தச் சமயத்திலும் அந்தந்த நாட்டுச் சட்டங்கள் யுத்தக் குற்றத்தின் பெயரால் பாயக் கூடிய சூழல் இன்னும் உண்டு. அதையே பிரிட்டனின் தற்போதைய நடவடிக்கை எடுத்துக் காட்டுகின்றது.

உதாரணத்துக்கு சில உயர்மட்ட வழக்குகளைச் சுட்ட விரும்புகிறேன். இது சம்பந்தப்பட்ட எந்த ஒரு முன்னாள் இயக்கத்துக்கோ அல்லது இப்போதைய கட்சிக்கோ எதிரான என்னுடைய விமர்சனம் அல்ல. நிலைமையின் ஆழத்தை – விபரீதத்தை – வாசகர்களுக்குப் புரிய வைப்பதற்கான உதாரணங்கள் மட்டுமே.

வெளிவிவகார அமைச்சராக இருந்த லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் அந்தக் கொலைச் சம்பவத்துக்கு உடந்தையாக இருந்தவர்கள் என்று கூறப்பட்டவர்களுக்கு எதிராக மாத்திரமே இலங்கையில் வழக்குத் தொடரப்பட்டுள்ளது. கதிர்காமரைக் குறி வைத்துச் சுட்டவர் யார் என்பது வெளிப்படுத்தப்படவில்லை. தப்பித் தவறி அப்படி ஒருவர் இன்னும் உயிருடன் இருந்து, வெளிநாட்டில் வதிவாராயின் அவருக்கு எதிராக இத்தகைய யுத்தக் குற்ற விசாரணை பாயலாம்.

புளொட் தலைவர் உமா மகேஸ்வரனைக் கொழும்பில் சுட்டுக் கொன்றவர் என்று கருதப்படுபவரும், அவரது மனைவியும் பின்னர் சுவிஸில் கொடூரமாகக் கொல்லப்பட்டனர். அந்தக் கொலையாளிகளுக்கு எதிராகவும் யுத்தக் குற்றம் பாயலாம்.

ஆக, அரச படைகளைச் சேர்ந்தோர் மட்டுமல்லர், முன்னாள் விடுதலைப் புலிகள், மாற்று இயக்கங்களைச் சேர்ந்தோர் எல்லோருக்கும் ஆபத்து இருகின்றது என்பதுதான் பிரிட்டன் பொலிஸார் 22ஆம் திகதி நடத்திய கைது நடவடிக்கையின் பிரதிபலிப்பாகும்.

இந்திய அமைதிப்படையின் காலத்தில் முரசொலி ஆசிரியர் எஸ்.திருச்செல்வத்தைப் போட்டுத்தள்ள வந்த துணைப் படைக்குழு, அவர் தப்ப, அவரது ஒரே மகன் அகிலனைக் கொடூரமாகக் கொன்றது. தந்தையார் திருச்செல்வம் இன்னும் கனடாவில் உள்ளார். அவர் பெயர் குறிப்பிட்டு யுத்தக் குற்ற முறைப்பாடு செய்வாராயின் யார், யாரோ சிக்கலாம்.

‘உதயன்’ அலுவலத்துக்குள் புகுந்து வெறியாட்டம் நடத்தியோர் வெளிநாட்டில் தஞ்சம் புகுந்திருந்தாலும் அவர்கள் மீதும் இந்த யுத்தக் குற்றக் கைவிலங்கு பாய இடமுண்டு.

பிரபாகரன் சரணடைந்து உயிரிழந்தார் என்று இப்போது கூறுகின்றார்கள். அப்படியானால் அவரைக் கொன்றமையும் யுத்தக் குற்றம்தான். அது குறித்துத் தகவல்கள் தெரிந்திருந்தும் அதை மூடி மறைப்பது கூட ஏதேனும் நாட்டினால் யுத்தக் குற்றமாக அர்த்தப்படுத்தப்பட வாய்ப்புண்டு.

ஊடகவியலாளர் நடேசன், சிவராம் போன்றோரைக் கொன்றவர்களுக்கும் இந்த ஆபத்து உண்டு.

இத்தகைய யுத்தக் குற்றத் தொடர்புகளில் சம்பந்தப்பட்டோருக்கு இன்றைய நிலையில் பாதுகாப்பான இடம் இலங்கைதான். இலங்கையில் இது வரைத் தண்டனைத் தீர்ப்பு இல்லாதவர்கள் வெளிநாடுகளில் இருந்து சத்தம் சந்தடியின்றி மெல்லக் கழன்று நாடு திரும்பினாலும் ஆச்சரியப்படுவதற்கில்லை.

நிமலராஜன் கொலை வழக்கில் நீதி நின்று கொல்லும் என்றுதான் எண்ணத் தோன்றுகின்றது.

நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில. 2000 ஆம் ஆண்டில் பி 423/2000 என்ற இலக்க வழக்குத் தாக்கல் செய்யப்பட்டு விசாரிக்கப்பட்டது. நெப்போலியன் என்று அழைக்கப்படும் செபஸ்டியன் ரமேஷ் உட்பட ஆறு பேர் சந்தேக நபர்களாக நிறுத்தப்பட்டனர். இடையில் பிணையில் வெளியே வந்தனர்.

வழக்கு ஆரம்பித்து இருபது வருடங்கள் கடந்தும் எந்த முன்னேற்றமும் இல்லாத நிலையில் வழக்கு கைவிடப்படுவதாக 2021 மேயில் சட்டமா அதிபர் அறிவித்தார்.

அதனால், நிமலராஜன் கொலை விடயத்தில் நிரந்தரமாகத் தப்பி விட்டோம் என்று கருதி சந்தேக நபர்கள் சந்தோஷப்பட்டிருக்கலாம்.

ஆனால், லண்டன் பொலிஸார் விடயத்தைத் தூசு தட்டி எடுத்து நீதி நின்றும் கொல்லும் என்று உறுதிப்படுத்த நடவடிக்கை மேற்கொண்டிருக்கின்றார்கள் என்று எண்ணத் தோன்றுகின்றது. நீங்கள் என்ன நினைக்கின்றீர்கள் வாசகர்களே...!

– மின்னல் –

---

## ஈ.பி.டி.பி....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

ஏற்கனவே, இரட்டைக் கொலை வழக்கில் யாழ் மேல் நீதிமன்றத்தினால் இரட்டை மரணதண்டனை விதிக்கப்பட்ட கொலைக் குற்றவாளியான இவர் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் கொலை வழக்கின் பிரதான சந்தேக நபராவார்.

யாழ்ப்பாணம், ஊர்காவற்துறைப் பகுதியில் கடந்த 2001ஆம் ஆண்டு நவம்பர் மாதம் 28ஆம் திகதி நாடாளுமன்றத் தேர்தல் பரப்புரைக்காகச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது ஊர்காவற்றுறை நாரந்தனை எனும் இடத்தில் குழு ஒன்று வழிமறித்து துப்பாக்கியால் சுட்டும், வாளால் வெட்டியும், இரும்புக் கம்பிகள், பொல்லுகளால் தாக்கியும் கொலைவெறித் தாண்டவமாடியது. அந்தத் தாக்குதலில் யாழ். பல்கலைகழக ஊழியர் ஏரம்பு பேரம்பலம் மற்றும் ரெலோ அமைப்பின் ஆதரவாளரான யோகசிங்கம் கமல்ஸ்ரோன் ஆகிய இருவரும் படுகொலை செய்யப்பட்டனர்.

அத்துடன் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வேட்பாளர்களான மாவை சேனாதிராஜா, எம்.கே.சிவாஜிலிங்கம் மற்றும் நடராஜா ரவிராஜ் உள்ளிட்ட 18 பேர் படுகாயங்களுக்குள்ளாகி இருந்தனர்.

அந்த வழக்கில் ஈ.பி.டி.பி. உறுப்பினர்களான நெப்போலியன் மற்றும் மதன் என்று அழைக்கப்படும் நடராஜா மதனராசா ஆகியோர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தனர்.

எனினும் அவர்கள் பின்னர் தலைமறைவாகினர்.

இந்தச் சம்பவம் தொடர்பான வழக்கு விசாரணைகளில் பாதிக்கப்பட்டோர் தரப்புக்காக சட்டத்தரணி கேசவன் சயந்தன் நீதிமன்றத்தில் முன்னிலையாகி வாதாடியிருந்தார். விசாரணையின் முடிவில் 2016ஆம் ஆண்டு டிசம்பர் 7ஆம் திகதி யாழ். மேல் நீதிமன்ற நீதிபதி ம. இளஞ்செழியன் ஈழமக்கள் ஜனநாயக் கட்சியைச் சேர்ந்த நெப்போலியன் என்று அழைக்கப்படும் எஸ்.ரமேஸ், மதன் என்று அழைக்கப்படும் நடராஜா மதனராசா உள்ளிட்ட மூவரைக் குற்றவாளிகளாகக் கண்டு இரட்டை மரண தண்டனைத் தீர்ப்பளித்தார்.

நெப்போலியன் மற்றும் மதன் ஆகியோர் இலண்டனில் தலைமறைவாக இருந்தனர் என்று கூறப்பட்டது

அதனால், எஸ். ரமேஸ் அல்லது நெப்போலியன், நடராஜா மதனராஜா அல்லது மதன் இருவருக்கும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றால் திறந்த பிடியாணை பிறப்பிக்கப்பட்டதுடன், வெளிவிவாகார அமைச்சு, நீதி அமைச்சு, சட்டமா அதிபர் திணைக்களம் மற்றும் பொலிஸ்மா அதிபர் திணைக்களம் ஆகிய இணைந்து இந்தக் குற்றவாளிகள் இருவரையும் இலங்கைக்கு நாடு கடத்துவதற்கான உரிய நடவடிக்கையை எடுக்குமாறும் யாழ்ப்பாணம் மேல் நீதிமன்றம் கட்டளை வழங்கியிருந்தது.

அதேவேளை, இதற்கு முன்னர் 2000 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் 19ஆம் திகதி இரவு 8 மணியளவில் ஊடகவியலாளர் மயில்வாகனம் நிமலராஜன் வீட்டில் செய்தி தயாரிப்புப் பணியில் ஈடுபட்டிருந்தவேளை சுட்டுப் படுகொலை செய்யப்பட்டார்.

இந்தப் படுகொலையின் பிரதான சந்தேகநபர் நெப்போலியன் எனப் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் இனங்காணப்பட்டு அவர் கைது செய்யப்பட்டு நீதிமன்றில் முற்படுத்தப்பட்டுப் பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

அதன் பின்னர் வழக்கு விசாரணைக்குச் சமுகம் அளிக்காது அவர் தலைமறைவானார்.

இந்நிலையிலையே, போர்க்குற்றச்சாட்டின் கீழ் இலண்டனில் வைத்துப் பொலிஸாரால் இவர் கைதுசெய்யப்பட்டுள்ளார் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

அதேவேளை, ‘யாழ். மேல் நீதிமன்றத்தால் குற்றவாளிகள் என இனங்காணப்பட்டு இரட்டை மரண தண்டனை வழங்கப்பட்ட மூவரும் குற்றவாளிகள் அல்லர். அந்தத் தாக்குதல் சம்பவத்துக்கும் ஈழமக்கள் ஜனநாயகக் கட்சிக்கும் எந்தத் தொடர்பும் இல்லை. குறித்த இரு நபர்களும் தற்போது வெளிநாட்டில் வாழ்ந்து வருகின்றார்கள். அவர்கள் வெளிநாடுகளில் எமது கட்சியின் செயற்பாடுகளைத் தொடர்ந்து முன்னெடுத்து வருகின்றார்கள். அவர்களுக்கு எதிராக சர்வதேச பிடியாணை பிறப்பிக்கப்பட்டுள்ளது. அவர்களைச் சர்வதேச பொலிஸார் பிடித்தால், பிடித்து இங்கே கொண்டு வரட்டும். தற்போது மேல் நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து, மேன்முறையீடு செய்யப்பட்டுள்ளது. அதனால் அந்த வழக்குத் தொடர்பில் கருத்துத் தெரிவிக்க விரும்பவில்லை.’ என்று கடந்த 2016ஆம் ஆண்டு டிசம்பர் மாதம் 19ஆம் திகதி யாழ்ப்பாணத்திலுள்ள ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அக்கட்சியின் செயலாளர் நாயகமும் தற்போதைய கடற்றொழில் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்திருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது

Director, Jaffna College Institute of Technology
Calls for the following courses

Civil Draughtperson (one year)
Minimum Qualification Passed G.C.E.(OL) with pass in Mathematics & English
Course leads to:
- Follow courses in level 5
- Register for drawings at local councils

Computer Certificate Courses
(3 - 4 months Part time)
- Certificate in MS OFFICE - (MS Word, Excel, Access & PowerPoint)
- Certificate in Graphic Designer - (Page Maker, PhotoShop & CorelDraw)
- Web Designing (HTML, CSS, JAVA Script PHP, MYSQL)
- JAVA, C++ Programming

Foundation in Information Technology
(FIT) (6 months part time)
Pre degree course leads to Bachelor|s in Information Technology (BIT), University of Colombo.

Commencement in the 2nd week of March 2022
The Courses will be conducted at our Jaffna Centre too
(Jaffna College Undergraduate dept. Building)
464 Hospital Road, Jaffna.
For further details contact
Tel no: 0212250975 0212223382
Email: ejcitsltnet.lk.



யாழ்ப்பாணம் - நல்லூர்- வட்டுக்கோட்டை - சங்கானை - சுன்னாகம் - ஆவரங்கால்- நெல்லியடி - கைதடி - சங்கத்தானை - பளை - கிளிநொச்சி - புதுக்குடியிருப்பு - முல்லைத்தீவு - கனகராயன்குளம் - மல்லாவி -மன்னார் - வவுனியா - திருகோணமலை- மூதூர் - கொழும்பு

POST YOUR AD yarlads.com
உங்கள் விளம்பரங்களை இலவசமாகப் பதிவிட


கிளிநொச்சியில்
ஐஸ்வர்யம்
பெருவிருந்து மண்டபம்
Ishwaryam Banquet Hall
Tel:- 021 228 3701, 076 306 8091
Whatsapp:- 071 7736 4308
No.315, Kandy Road,
Kilinochchi
அன்பான வரவேற்பு
தமிழர் பாரம்பரிய உணவு வகைகள்
இந்தியன் இனிப்புப் பண்டங்கள்
இந்தியன் உணவுவகைகள்
Online booking இற்கு விசேட விலைக்கழிவாக
30% பெற்றுக்கொள்ளலாம்.
சகலவிதமான நிகழ்வுகளும் புதிதாக வடிவமைக்கப்பட்ட அனைத்து
வசதிகளுடனும் அழகான விருந்துபசார மண்டபம்
ISHWARYAM BANQUET HALL
BANQUET MEALS HALL
FULL OPTION
MAIN DIHES
Vegitable Fried Rice with
Panner & Ghee - 900/=
Chiken Fried Rice with
Vegetable - 1100/=
Kothu Rotty With Vegitable
in Indian Style
DESSERT
ice Cream Cup - 60/=
Fruit Salad - 60/=
I ce Cream & Fruit Salad - 100/=
Cream Caramel - 120/=
SPECIAL MENU PACKAGE
BEVERAGES
jUICE 200 ml - 70/=
Milk Drink - 70/=
Cocacola M - 70/=
Pepsi M - 70/=
Swchpees Tin - 250/=
Coca Cola Tin - 250/=

காலைக்கதிர் Kalaikkathir

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

## வெடித்தது யுத்தம்!

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்புப் போரை ரஷ்யா ஆரம்பித்து விட்டது.

உக்ரைனுக்கு வலிமையான நட்புப் போல இதுவரை செயற்பட்டு, அதற்கு உருவேற்றி – உசுப்பேத்தி – வந்த அமெரிக்கா தலைமையிலான நேட்டோ அமைப்பு நாடுகள் – நேச நாடுகள் – என்ன பதில் நடவடிக்கை எடுக்கப் போகின்றன என்பதில்தான் இந்த யுத்தத்தின் அடுத்த கட்டம் தீர்மானிக்கப்படும்.

அமெரிக்கா தலைமையிலான தரப்புகள் முன்னெடுத்திருக்கும் பொருளாதாரத் தடை ரஷ்யாவுக்குப் பெரும் பாதிப்பைத் தரும் என்பது கண்கூடு.

ஆனால், ரஷ்யாவின் இராணுவத் தீவிர மூர்க்கத்தை அடக்குவதற்கு இந்தப் பொருளாதாரத் தடை போதுமானதல்ல.

அது மாத்திரமல்ல, அமெரிக்கா மற்றும் மேற்குலக நாடுகளின் பொருளாதாரத் தடையால் ஏற்படக் கூடிய அழுத்தங்கள், நெருக்கடிகளை எதிர்கொண்டு சமாளிப்பதற்காக ரஷ்யா சீனாவின் உதவியை நாடும்.

அமெரிக்கா தலைமையிலான மேற்கு நாடுகளின் பொருளாதாரத் தடையை சீனா கணக்கெடுப்பதில்லை. ஆனால் சீனாவோ ரஷ்யாவுக்கு இந்த நெருக்கடி சமயத்தில் உதவுவதன் மூலம், ஏற்கனவே வேகமாக வளர்ந்து வரும் தனது பொருளாதாரத்தை மேலும் மேம்படுத்தப் பயன்படுத்திக் கொள்ளும்.

ஆக, அமெரிக்கா தரப்பு ரஷ்யா மீது விடுத்திருக்கும் பொருளாதாரத் தடை சீனாவுக்கு ஒரு 'டொனிக்' என்றே சொல்லலாம்.

எனினும், ரஷ்யாவின் இந்த இராணுவ ஆக்கிரமிப்புக்கு எதிராக நேட்டோ நாடுகளின் பிரதிபலிப்பு வெறும் கண்டனங்கள், ஐ.நா. சபை நடவடிக்கைகள், பொருளாதாரத் தடை போன்றவற்றுடன் அடங்கி விடாது என்பது நிச்சயம். இந்த யுத்தம் மூண்டது ஐரோப்பியக் கண்டத்துக்கு ஒரு கண்டம்தான்.

சீனாவில் அண்மையில் தொடங்கிய குளிர்கால ஒலிம்பிக் போட்டியின் ஆரம்ப நிகழ்வு சமயம் பெய்ஜிங் சென்றிருந்த ரஷ்ய அதிபர் புடின், இவ்வாறு கட்டவிழக் கூடிய யுத்தம் ஒன்று நேரும் சமயத்தில் இராணுவ உதவி அல்லாத மற்றைய விடயங்களில் சீனாவின் ஒத்தாசையைப் பெற்றுக் கொள்வது குறித்து சீனத் தலைவர்களுடன் விரிவாகப் பேசியிருந்தார் என்று கூறப்படுகின்றது.

ஆகவே நேரடி இராணுவ நடவடிக்கை அழுத்தம் அல்லாத வேறு எத்தகைய பதிலடி செயற்பாடுகளை நேட்டோ நாடுகள் எடுத்தாலும் அவை உடனடியாக ரஷ்யாவைக் காத்திரமான நெருக்கடிக்குள் தள்ளாது என அவதானிகள் கூறுகின்றனர்.

இதற்கிடையில், தென்னையில் தேள் கொட்டினால் பனையில் நெறி கட்டியமை மாதிரி, உக்ரைன் மீதான ரஷ்ய இராணுவ ஆக்கிரமிப்பைக் காரணம் காட்டி தனது ஆட்சிப் பீடத் தவறுகளை மூடி மறைக்க இலங்கையின் அரசுத் தலைமை இனி முயற்சிக்கும் என எதிர்பார்க்கலாம்.

இந்த யுத்தம் வெடித்தமையை அடுத்து, ஒரே நாளில் தங்கத்தின் விலை சவரனுக்கு நான்காயிரம் ரூபா முதல் ஐயாயிரம் ரூபா வரை அதிகரித்து விட்டது. சர்வதேச எரிபொருள் சந்தையில் மசகு எண்ணெய்யின் விலை பரல் நூறு டொலர் என்பதைக் கடந்து விட்டது.

இனி என்ன? இலங்கையின் இப்போதைய பொருளாதார நெருக்கடி மற்றும் பின்னடைவு நிலைக்கு இதுவரை கொரோனாப் பேரிடரைக் காரணம் காட்டிய கோட்டா அரசுக்குப் புதிதாக உருட்டுவதற்கு இன்னொரு விவகாரம் கிடைத்து விட்டது. ரஷ்ய – உக்ரைன் யுத்தத்தால் ஏற்பட்ட பாதிப்பு என்று இனி நாட்டின் பின்னடைவுகள் எல்லாவற்றையும் அதன் மீது சுமத்தித் தான் தப்ப முயலும் கோட்டா அரசு என்பதும் நிச்சயம்.

# நிதி நெருக்கடிகளுக்குத் தீர்வாக இலங்கையில் முதலீட்டுக்கு தயார்

## இந்திய வெளிவிவகார அமைச்சர் ஜெய்சங்கர் உத்தரவாதம்



நிதி நெருக்கடியைக் குறைக்க இலங்கையில் முதலீடு செய்யத் தயாராக இருக்கிறேன் என இந்திய வெளிவிவகார அமைச்சர் சுப்பிரமணியம் ஜெய்சங்கர் தெரிவித்துள்ளார்.

இணையவழி கலந்துரையாடல் ஒன்றின்போதே இந்திய வெளிவிவகார அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் காணப்படும் நிதி நெருக்கடியைக் குறைக்க இந்தியா மற்றும் இலங்கை இடையே பல கட்டப் பேச்சுகள் நடந்தன என அமைச்சர் ஜெய்சங்கர் கூறினார்.

குறிப்பாக அந்நியச் செலாவணியை பேணுவதற்கும், எரிபொருள் மற்றும் பிற அத்தியாவசியப் பொருள்களை வாங்குவதற்கும் இந்தியா கடன் உதவியை வழங்கியுள்ளது.

இருப்பினும் கடுமையான அந்நியச் செலாவணி தட்டுப்பாடு காரணமாக, இலங்கைக்கு எரிபொருள் இறக்குமதி செய்ய பணம் இன்மை காரணமாக மின்சாரம் துண்டிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# மட்டு.நகரில் உலக வங்கியின் நிதியுதவியில் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் ஆரம்பம்

மட்டக்களப்பு, பெப். 25

மட்டக்களப்பு மாநகரசபை ஊடாக வட்டாரத்திற்கு 50 லட்சம் ரூபா ஒதுக்கீடுசெய்யப்பட்டுள்ளதுடன் உலக வங்கியின் நிதியுதவியுடனும் பல்வேறு அபிவிருத்தித் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளன என மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாநகரசபை மூலம் முன்னெடுக்கப்பட்டுவரும் அபிவிருத்தித் திட்டங்களை மக்களின் பாவனைக்கு வழங்கும் நடவடிக்கைகள் தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டுவருகின்றன.

மட்டக்களப்பு மாநகரசபைக்குட்பட்ட திருப்பெருந்துறை 9ஆம் குறுக்கு வீதி கொங்கிறீட் வீதியாக புனரமைக்கப்பட்டு மக்களுக்கு கையளிக்கும் நிகழ்வு நடைபெற்றது.

மக்கள் பயணிக்க முடியாத நிலையில் மிக மோசமான நிலையிலிருந்த வீதி மாநகரசபையின் 25 லட்சம் ரூபா நிதியொதுக்கீட்டில் கொங்கிறீட் வீதியாகப் புனரமைக்கப்பட்டுள்ளது.

திருப்பெருந்துறை வட்டார மாநகரசபை உறுப்பினர் மா.சண்முகலிங்கத்தின் வேண்டுகோளுக்கு அமைவாக குறித்த வீதி புனரமைக்கப்பட்டு மக்களிடம் கையளிக்கப்பட்டது.

மாநகரசபை உறுப்பினர் மா.சண்முகலிங்கம் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபையின் முதல்வர் தி.சரவணபவன் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு திறந்துவைத்தார்.

இந்த நிகழ்வில் மட்டக்களப்பு மாநகரசபை உறுப்பினர்களான இராஜேந்திரன், து.மதன், பூபாலராஜா, சசிகலா ஆகியோர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

# தமிழரசுக் கட்சி வாலிபர்முன்னணி முன்னெடுக்கும் கையெழுத்துப் போராட்டத்துக்கு ஆதரவளிக்குக!

## மாவை அழைப்பு



பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்க வேண்டும் என நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்படும் கையெழுத்து போராட்டத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி அழைப்பு விடுத்துள்ளது.

மேலும் இந்தப் போராட்டத்தை இம்மாத இறுதிக்குள் நிறைவு செய்ய எதிர்பார்த்துள்ளதாக அந்தக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா தெரிவித்தார்.

அதன் பின்னர் சர்வதேச சமூகத்திடமும் இலங்கை அரசாங்கத்திடமும் மேற்படி ஆவணம் ஒப்படைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

யாழ்ப்பாணத்திலுள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இதனைக் குறிப்பிட்டார்.

மேலும் குறித்த கையெழுத்து போராட்டத்தில் அனைத்துக் கட்சிகளையும் பங்கேற்குமாறு மாவை சேனாதிராஜா அழைப்பு விடுத்துள்ளார்.

# ஷானி அபேசேகரவிற்கு உயிருக்கு அச்சுறுத்தல்!

## நாடாளுமன்றில் சஜித் அரசைக் கண்டிப்பு

குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தின் முன்னாள் பணிப்பாளர் ஷானி அபேசேகரவின் உயிருக்கு அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மீது திட்டமிட்டு செயற்பாடுகளை முன்னெடுத்துவரும் அரசாங்கத்தின் நடவடிக்கையைத் தாம் கண்டிக்கின்றோம் எனவும் நாடாளுமன்றில் அவர் கூறினார்.

அவரை இலக்கு வைத்து அரசாங்கம் மேற்கொள்ளும் நடவடிக்கைகள் அச்சுறுத்தல்விடுக்கும்வகையிலேயேகாணப்படுகின்றன என்றும் தெரிவித்தார்.

எனவே இந்த விடயம் தொடர்பாக சபாநாயகருக்கு கவனம் செலுத்தி பாதுகாப்பு அமைச்சருக்கும் ஆலோசனைகளை, வழங்கி அவரின் உயிரைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்குமாறும் சஜித் பிரேமதாஸ கேட்டுக்கொண்டார்.

இதேவேளை நாட்டில் டொலர், டீசல், பெற்றோல், பால் மா தட்டுப்பாடு நிலவும் நிலையில் உயர்தரப் பரீட்சை காலத்தில் மேற்கொள்ளப்படும் மின்சாரத் துண்டிப்புத் தொடர்பாகவும் அவர் அதிருப்தி வெளியிட்டார்.

மேலும் பொருளாதார சிக்கல்கள் தொடர்பாக தாம் முன்வைக்கும் கேள்விகளுக்கு அரசாங்கத்திடம் இருந்து இதுவரை பதில்கள் கிடைக்கவில்லை என்றும் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டினார்.

# ‘யார் உங்களை தாழ்த்தி பேசுகின்றார்களோ அவர்கள் முன் வாழ்ந்து காட்டுங்கள்...!”

## Tharsha Beauty Salon அழகுக்கலை நிறுவனத்தின் உரிமையாளர் தர்ஷாயினி விஜயகுமாரின் நேர்காணலிது.



தர்ஷாயினி விஜயகுமார்
உரிமையாளர்
Tharsha Beauty Salon அழகுக்கலை நிறுவனம்

### உங்களைப் பற்றிய அறிமுகம்

நான் தர்ஷாயினி விஜயகுமார். வடமராட்சியில் நெல்லியடியில் வசித்துவருகிறேன். தர்ஷா பியூட்டி செலூன் என்ற என் சொந்த அழகுக்கலை நிலையத்தை நடாத்தி வருகின்றேன். எனது அம்மாவும் அப்பாவும் ஜனனி நகை மாடம் எனும் நகை கடையை 30 வருடகாலமாக சிறப்பாக நடாத்தி வருகின்றார்கள். அவ்வப்பொழுது நானும் எனது அம்மா அப்பாவிற்கு உதவியாக நகைக்கடைக்குச் சென்று சிறு சிறுவேலைகளைப் பார்ப்பதுண்டு. நாங்கள் வீட்டில் ஐந்து பெண்கள். அனைவரும் தனக்கு பிடித்த துறையையோ அல்லது தொழிலையோ தேர்ந்தெடுக்கும் சுதந்திரத்தை எமது பெற்றோர் எமக்கு வழங்கியிருந்தனர். நான் அழகுக்கலைத்துறையில் சாதிக்க என் குடும்பம் எனக்கு பெரும் ஒத்துழைப்பை வழங்கியது. இதை இவ்விடத்தில் நான் கூற நான் கடமைப் பட்டிருக்கிறேன்.

### அழகுக்கலைத் துறையில் எப்படி ஆர்வம் வந்தது?

ஆரம்ப பள்ளிப்பருவ நாட்களில் சித்திரம் வரைதல், வர்ண வேலைப்பாடுகள் போன்ற இணைப் பாடவிதான செயற்பாடுகளில் எனக்கு ஆர்வம் அதிகம். எனது அப்பா ஒரு பிரபலமான தொழிலதிபர். அவரைப் பார்த்தே நானுமொரு சுயதொழில் நிறுவனத்தை ஆரம்பிக்கவேண்டுமென்று எனக்குள்ளேயே ஒரு இலட்சியத்தை உருவாக்கிக்கொண்டேன். அழகுக் கலைத்துறையின் பக்கம் ஈர்ப்பு வரும் போது சரியாக எனக்கு வயது 19. ஆரம்பத்திலிருந்தே அழகுக் கலையின் அடிப்படைகளை கற்றுக் கொண்டு பின் உயர் படிப்புகளையும் கற்றுக்கொண்டேன். எனது முதல் மணப்பெண் அலங்காரத்தை கண்டு பாராட்டுகளும் வாழ்த்துகளும் குவியத்தொடங்கின. இதுவே எனக்கு அழகுக்கலைத்துறையில் மேலும் மேலும் ஆர்வம் ஏற்பட காரணமாயிருந்தது.

### இத்துறையில் நீங்கள் எதிர்நோக்கும் சவால்கள் என்ன?

என்னை சுற்றி புறம்பேசுபவர்கள் கொஞ்சம் அதிகம் தான். ஆனாலும் கூட அவர்களிடம் தாழ்ந்து போகாமல் அடுத்த இலக்கை நோக்கிய என் பயணத்தை ஆரம்பிப்பது எனக்கொரு சவாலாகவே இருக்கிறது. ஒரு விடயத்தை நான் செய்யும்போது ஒத்துழைப்பை வழங்க பலர் இருந்தாலுமே அதை செய்யவிடாமல் எதிர்ப்புதெரிவிக்கும் கூட்டமும் இருக்கிறது. ஆகவே என்னைப் பொருத்தமட்டில் நினைப் பதை நிறைவேற்றுவது கூட ஒரு சவால்தான்.




### அழகுக் கலைத்துறையில் உங்களுக்கு கிடைத்த வாய்ப்புகளும் நீங்கள் அடைந்த சாதனைகளையும் பற்றி ஒரு சில..

அழகுக்கலைத்துறையில் நான் கொண்ட ஆர்வம் பல வாய்ப்புகளை எனக்குப் பெற்றுக் கொடுத்தது. அண்மையில் கொழும்பில் நடந்தேறிய அருந்ததி தனியார் நிறுவனத்தின் மாற்றுமோதிரம் மணப்பெண் அலங்காரக் காட்சியில் பங்குபற்றும் வாய்ப்பு கிடைத்தது. Beautician Association இல் அங்கத்துவராகும் வாய்ப்பும் எனக்கு கிடைத்தது. அழகுகலைத்துறையில் இன்னும் தேர்ச்சி பெற்றுக்கொள்ளும் வாய்ப்பாக பல பயிற்சிப்பட்டறைகளில் கலந்துகொள்ளும் வாய்ப்புகளும் எனக்கு கிடைத்தது. எனக்கு கிடைத்த இந்த வாய்ப்புகள் என்னை இன்னும் பலப்படுத்தியதென்றே கூறவேண்டும்.

2019 ஆம் ஆண்டு Jaffna District Beautician Association இல் முதன் முறையாக மணப்பெண் அலங்காரக்காட்சியில் பங்குபற்றினேன். 2020 மற்றும் 2022 இல் அருந்ததி நிறுவனத்தினால் யாழ் மற்றும் கொழும்பில் நடாத்தப்பட்ட மணப்பெண் அலங்காரக்காட்சியில் பங்குபற்றி விருதும் பெற்றுக்கொண்டேன்.

### சாதிக்க நினைக்கும் பெண்களுக்கு நீங்கள் கூற நினைப்பது.

எக்காரணத்திற்காகவும் எந்த நேரத்திலும் பெண்களை இந்த சமூதாயம் விமர்சிக்ககூடாது என்பதே என்னுடைய எதிர்பார்ப்பு. யார் உங்களை தாழ்த்தி பேசுகின்றார்களோ அவர்கள் முன் வாழ்ந்து காட்டுங்கள். எந்த விடயமாக இருந்தாலும் தைரியமாக நின்று அதனை எதிர்கொள்ளுங்கள். தன்னம்பிக்கையை எப்போதும் விட்டுவிடாது என்ன சவாலாக இருந்தாலும் வாழ்க்கையில் உங்களுக்கென்றவொரு தனியிடத்தை உருவாக் குங்கள்.






காலைக்கதிர்
Kalaikkathir

# இந்தப் போராட்டம் ஆரம்பம் மாத்திரமே ஜனாதிபதியின் வீட்டை முடக்குவோம்!

## சாணக்கியன் மீண்டும் எச்சரிக்கை



ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகப் போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்புத் தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் போராட்டமொன்றை முன்னெடுத்திருந்தனர்.

ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் இரண்டு நாடாளுமன்ற உறுப்பினர்களும், சி.விக்னேஸ்வரன் மற்றும் மனோ கணேசன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றிருந்தனர்.

இந்நிலையில் மேற்படி போராட்டத்தில் பங்கேற்று ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போதே இரா.சாணக்கியன் மேற்கண்டவாறு எச்சரிக்கை விடுத்திருந்தார்.

இதன்போது அங்கு தொடர்ந்தும் கருத்து வெளியிட்ட அவர் –

நான் ஊடகங்கள் ஊடாக அரசாங்கத்துக்கு ஒரு செய்தியை சொல்லியிருந்தேன். அதாவது தமிழ் மக்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் தவறினால் ஜனாதிபதி செயலகத்தையோ அல்லது ஜனாதிபதியின் வீட்டையோ முற்றுகையிடுவோம் எனத் தெரிவித்திருந்தேன்.

இன்றைய தினம் (நேற்று) தமிழ் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற நாடாளுமன்ற உறுப்பினர்களாக நாம் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாகக் கூடியுள்ளோம். இது ஆரம்பம் மாத்திரமே. எமது கோரிக்கையை நிறைவேற்றத் தவறினால் ஜனாதிபதியின் வீட்டை முடக்குவோம் என்பதைக் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

அதேபோன்று இங்கு நாம் போராட்டத்தை முன்னெடுக்கும் போது, ஊட கவியலாளர்கள் இல்லாத சிலர் வந்து எங்களைப் படம் எடுக்கின்றனர். தமிழ் மக்களின் வாக்குகளால் தெரிவு செய்யப்பட்டுள்ள எங்களுக்கே இவ்வாறு அச்சுறுத்தல் விடுக்கப்படுகின்றது என்றால், வடக்கு, கிழக்கில் போராட்டத்தில் ஈடுபடுபவர்கள் எவ்வாறான அச்சுறுத்தல்களுக்கு முகங்கொடுப்பார்கள் என்பதை உணர்ந்து கொள்ள முடிகின்றது. – எனத் தெரிவித்துள்ளார்.

# தமிழ்த் தேசியக் கட்சிகளின் எம்.பிக்கள் ஜனாதிபதி செயலகம் முன் போராட்டம்!






















காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களை பிரதிநிதித்துவப்படுத்தும் தமிழ்த் தேசியம் பேசுகின்ற கட்சிகளின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர். ஜனாதிபதி செயலக வளாகத்தில் நேற்று (வியாழக்கிழமை) காலை முதல் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்படடது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 8 நாடாளுமன்ற உறுப்பினர்களும் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் 2 நாடாளுமன்ற உறுப்பினர்களும், தமிழ் மக்கள் கூட்டணியைச் சேர்ந்த யாழ்.மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன் மற்றும் மனோ கணேசன் எம்.பியும் இந்த ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

மேலும் இந்த போராட்டத்தின்போது அடையாளம் தெரியாத நபரொருவர் புகைப் படம் மற்றும் காணொளிகளை எடுத்தார் எனவும் ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக போராட்டத்தில் ஈடுபட முடியவில்லை என்றால், ஏனைய மக்களின் வாழ்க்கை நிலை தொடர்பில் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் கேள்வியெழுப்பினார்.

காலைக்கதிர்
Kalaikkathir

# மலையகத் தமிழரின் பிரச்சினைகளை மோடியிடம் எடுத்துச்சொல்லத் தயார்!

## மனோ கணேசன் முடிவு



மலையகத் தமிழர்களின் அரசியல் அபிலாஷைகள் அடங்கிய ஆவணத்தை இறுதி செய்து பிரதமர் மோடிக்கு அனுப்பத் தீர்மானித்துள்ளதாகத் தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இந்த ஆவணம் முதலில் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டு பின்னரே இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பி வைக்கப்படும் என்றும் அவர் கூறினார்.

மலையக மக்களின் அரசியல், கலாசார, பொருளாதார மற்றும் சமூகத் துறைகள் இலங்கை அரசியல் மற்றும் நிர்வாகக் கட்டமைப்பிற்குள் கொண்டு வரப்பட வேண்டும் என்றும் வலியுறுத்தினார்.

காலாகாலமாக மலையக மக்கள் பாகுபாடு காட்டப்பட்டு, புறக்கணிக்கப்பட்ட சந்தர்ப்பங்களை மேற்கோளிட்ட அவர், இந்த நிலை மாற வேண்டும் என்றும் அதற்காக அரசாங்கம் உட்பட அனைத்துத் தரப்பினருடனும் இணைந்து செயற்படத் தயார் என்றும் தெரிவித்தார்.

மேலும், இந்திய வம்சாவளித் தமிழ் இலங்கையர்களுக்கான கடப்பாடுகளின் தொகுப்பில் பெரும் பங்கைக் கொண்டிருப்பதாகத் தாம் நம்புகின்ற இங்கிலாந்து அரசாங்கத்திடம் இதை எடுத்துச் செல்வோம் என்றும் மனோ கணேசன் கூறினார்.

இதேவேளை எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுடன் தமிழ் முற்போக்கு கூட்டணி பேச்சு நடத்தும் என்றும் அதன் பின்னர் தமிழகம் சென்று முதல்வர் மு.க. ஸ்டாலின் மற்றும் பிற அரசியல் கட்சிகளுடன் பேசவுள்ளோம் எனவும் தெரிவித்தார்.

இதற்கிடையில், 13 ஆவது அரசமைப்புத் திருத்தத்தை முழுமையாக அமுல்படுத்த இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துமாறு கூட்டமைப்பு தலைமையிலான ஏழு தமிழ் அரசியல் கட்சிகள் கடந்த மாதம் மோடிக்கு கடிதம் எழுதியுள்ளன.

அத்தோடு புதிய அரசமைப்பு வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கான அதிகாரப் பகிர்வின் இலக்கை பாதிக்காது என்பதை உறுதி செய்வதற்காக தமிழ்நாட்டுடன் நேரடி ஈடுபாட்டைக் கோரி கூட்டமைப்பு கடந்த வாரம் ஸ்டாலினுக்கு கடிதம் எழுதியது. - என்று தெரிவித்தார்.

# எரிவாயு, அரிசி, சீனி, பால்மா, சீமெந்து தட்டுப்பாடு இருக்கின்றமை உண்மையே!

## ஒப்புக்கொண்டது அரசாங்கம்

கொழும்பு, பெப். 25

அண்மைய நாள்களில் எரிவாயு, அரிசி, சீனி, பால் மா மற்றும் சீமெந்து தட்டுப்பாடு மற்றும் விலைவாசி உயர்வை அரசாங்கம் ஏற்றுக்கொண்டுள்ளது.

நாடாளுமன்றில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளித்த போதே நுகர்வோர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் லசந்த அழகியவண்ண இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும் தற்போது எரிவாயு, சீனி மற்றும் அரிசிக்கு தட்டுப்பாடு இல்லை எனவும், விலை உயர்வாகவே இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

மேலும் பால் மா மற்றும் சீமெந்து தொடர்பான பிரச்சினைக்கு இதுவரை தீர்வு காணப்படவில்லை என இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

இந்த இரண்டு பொருள்களுக்கும் விதிக்கப்பட்டுள்ள அனைத்து வரிகளையும் நீக்கி பிரச்சினைக்குத் தீர்வு காண அரசாங்கம் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளதாகக் கூறினார்.

# 30 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்துக்கு கொரோனா பிரதான காரணமாக இல்லை!

## ஹேமந்த ஹேரத் தெரிவிப்பு

கொழும்பு, பெப். 25

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழக்கும் 30 வயதுக்குட்பட்டவர்களின் மரணத்துக்கு கொரோனாத் தொற்று பிரதான காரணம் அல்ல என சுகாதார அமைச்சின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் வைத்தியர் ஹேமந்த ஹேரத் தெரிவித்தார்.

நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழப்பவர்கள் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்து வெளியிடும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கொரோனாத் தொற்றுக்கு உள்ளானதன் பின்னர் உயிரிழந்தவர்களில் பலர் சிறுவயது முதலே நாள்பட்ட நோய்களால் பாதிக்கப்பட்டவர்கள் என அவர் தெரிவித்தார்.

இவ்வாறு மரணிப்பவர்களுக்கு சிறுநீரக நோய் மற்றும் நரம்பு மண்டலம் சார்ந்த நோய்கள் மரணத்துக்கான பிரதான காரணங்களாக அமைந்துள்ளன என அவர் மேலும் சுட்டிக்காட்டினார்.

# பம்பலப்பிட்டிக் கடற்கரையில் சுற்றித்திரியும் இராட்சத முதலை



பம்பலப்பிட்டி கடற்கரையில் புதன்கிழமை காலை இராட்சத முதலை ஒன்று சுற்றித் திரிவதைக் காட்டும் காணொளிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

பல வாரங்களுக்கு முன்னர் பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் காலி முகத்திடல் கடற்பரப்பில் பதிவாகிய தொடர் முதலை சம்பவங்களைத் தொடர்ந்து இந்த காணொலிகள் சமூக வலைத்தளங்களில் பரவி வருகின்றன.

இருப்பினும், கடற்கரையில் முன்பு பார்த்த முதலைகளைவிட இந்த விலங்கு பெரியதெனத் தெரிவிக்கப்படுகிறது.

இதனால் மீண்டும் தமது செயற்பாடுகள் பாரிய அச்சுறுத்தலுக்கு உள்ளாகியுள்ளன என கரையோரப் பகுதியுடன் தொடர்புடைய மீனவர்களும் குற்றம் சுமத்தியுள்ளனர்.

பம்பலப்பிட்டி, கொள்ளுப்பிட்டி மற்றும் தெஹிவளை - கல்கிஸ்ஸ பிரதேசங்களைச் சேர்ந்த மீனவர்கள் தொழில்துறைக்கு பாரிய பாதிப்பை ஏற்படுத்தி வரும் இந்த முதலை அச்சுறுத்தலை இல்லாதொழிக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டுமென அவர்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

கடந்த காலங்களில் மேற்படி பிரதேசத்தின் கரையோரங்களில் காணப்பட்ட முதலைகள் கொழும்பு நகரில் உள்ள கால்வாய்கள் ஊடாக கடலுக்கு இடம் பெயர்ந்துள்ளன என வனவிலங்கு அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

எனினும் இந்த விலங்குகள் கடலுக்கு இடம்பெயர்வதைத் தடுக்க இதுவரை தெளிவான நடவடிக்கை எடுக்கப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது.

# மின்வெட்டு அமுல் தொடர்பாக மக்கள் நீதிமன்றை நாடலாம்!

## என்கின்றார் ரணில்



அறிவிக்கப்பட்ட கால அட்டவணையை மீறி மின்வெட்டு அமுல்படுத்தப்பட்டால் பொதுமக்கள் நீதிமன்றத்தை நாட முடியும் என முன்னாள் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர், பொதுமக்களால் இது தொடர்பாக அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்ய முடியும் என்றும் தெரிவித்தார்.

தற்போது அமுல்படுத்தப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ள மின்வெட்டு உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கு கவலையை ஏற்படுத்தியுள்ளது எனக் கூறினார்.

ஆகவே பரீட்சை முடியும் வரை - மார்ச் 5 ஆம் திகதி வரை மின்வெட்டு அமுல்படுத்துவதை நிறுத்தி வைக்குமாறு ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க கேட்டுக்கொண்டார்.

# எஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகள் அரசியல் தலையீடின்றி சுயாதீனமாக நடைபெறுகின்றன

## நீதி அமைச்சர் அலி சப்றி உத்தரவாதம்



ஈஸ்டர் தாக்குதல் தொடர்பான வழக்கு விசாரணைகள், எவ்வித அரசியல் தலையீடுகளும் இன்றி சுயாதீனமாக இடம்பெற்று வருகின்றன என நீதி அமைச்சர் அலி சப்ரி தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்றில் உரையாற்றிய அவர் -

தாக்குதல் நடந்த காலகட்டத்தில் ஆட்சியில் இருந்தவர்கள் தற்போது எதிர்க்கட்சியில் இருக்கின்றனர் எனக் குறிப்பிட்டார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக முன்கூட்டியே கிடைத்த புலனாய்வுத் தகவல்களைக் கவனத்தில் எடுத்திருந்தால், இந்தத் தாக்குதலைத் தடுத்திருக்கலாம் என்றும் அவர் சுட்டிக்காட்டினார்.

இந்நிலையில் தற்போது இது தொடர்பாக எதிர்க்கட்சியினர் அரசாங்கத்தின் மீது குற்றம் சுமத்துவதை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அமைச்சர் அலி சப்றி தெரிவித்தார்.

இதேநேரம் தாக்குதல் தொடர்பாக ஒருவர் மீது வழக்கு தாக்கல் செய்வது, விடுதலை செய்வது உள்ளிட்டவை தொடர்பாக சட்டமா அதிபரே தீர்மானிக்கின்றார் என்றும் அவர் குறிப்பிட்டார்.

# கழுதை தேய்ந்து......!

## அக்கரை / அக்கறை அலசல்



என்.சத்தியமூர்த்தி

ஆறு தமிழ்க் கட்சிகள் கூட்டாக இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பிய கடிதத்தை தொடர்ந்து, தமிழரசுக் கட்சி மீண்டும் முருங்கை மரம் ஏறி உள்ளது, வருத்தத்திற்குரிய நிகழ்வு. காரணம் எதுவாயினும், யாழ்ப்பாண நகரில், ஆறு தமிழ்க் கட்சிகள் பங்குபெற்ற தமிழ் தேசியம் குறித்த கருத்தரங்கில் கூட்டமைப்பு பங்குபெறாமை இதனையே குறிக்கிறது. இத்தகைய செயற்பாடுகள், இனப்பிரச்சினைக்கு தீர்வு காண்பதை விட, வட மாகாண அரசியலில், தமிழரசு கட்சி, தான் இழந்து விட்ட முக்கியத்துவத்தை மீண்டும் நிலை நிறுத்துவதற்கு மட்டுமே முக்கியத்துவம் கொடுப்பதான எண்ணத்தைத் தோற்றுவிக்கிறது.

தமிழரசு முக்கிய பங்கு வகிக்கும், தமிழ் தேசியக் கூட்டமைப்பில், அந்தக் கட்சி வைத்ததுதான் சட்டம் என்றாகி விட்டது. அதிலும் குறிப்பாக, தமிழரசை சார்ந்த கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தனுக்கு உள்ள மரியாதை அலாதியானது. அந்த மரியாதை, அவர் முயன்று,



சிறிமாவோ

தனது திறமை மற்றும் செயல்பாட்டால், தக்க வைத்துக் கொண்டது. அவரது வயது, அறிவு முதிர்ச்சி, அரசியல் அனுபவம், சர்வதேசத்துடனான உறவு, ஏன், தென்னிலங்கை அரசியல் தலைமைகளுக்கு அவர் மீதுள்ள மரியாதை, அனைத்தையும் தமிழ் இனத்திற்காக சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ள மக்களுக்குகிடைத்தவாய்ப்புஎன்றேஇதனை கருத வேண்டும்.

அதே சமயம், முன்பு, இனப்போருக்கு முந்தைய காலத்தில் கோலோச்சி, தற்போது மறந்தடிக்கப்பட்ட தமிழ் ஐக்கிய விடுதலை கூட்டணி (TULF) காலத்திய தனது இடத்தை, தமிழரசு மீண்டும் தக்க வைத்துக் கொள்ள முயல்வதாகவே தோன்றுகிறது. அந்த வகையில், தேசிய அளவிலாவது, தற்போது, தமிழர் அரசியல் தளர்விற்கான முக்கிய காரணம், தமிழரசும் அதனை ஒட்டி கூட்டமைப்பும் என்று, இரண்டு தலைமைகளும் உணர்ந்து கொள்ள வேண்டும்.

காரணம், கூட்டமைப்பில் தமிழரசுக்கு மட்டுமே அதிக அளவிலான வாக்கு வங்கி உள்ளது. அனைத்து தமிழ்க் கட்சிகளுடன் ஒப்பிட்டு பார்த்தாலும் இதுவே உண்மை. கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் பிற கட்சிகள் தேர்தலில் வெற்றி பெற்று, ஒன்று அல்லது இரண்டு நாடாளுமன்ற ஆசனங்களை வெல்வதற்கு, அவர்களுக்கு தமிழரசுக் கட்சியின் ஆதரவும், அந்த கட்சியின் ‘வீடு’ தேர்தல் சின்னமும் தேவை. இவ்வாறான எண்ணமே தமிழரசுக் கட்சியின் ஒருதலைபட்ச முடிவுகளுக்கு காரணம் எனலாம்.

அந்த விதத்தில், உறுப்பு கட்சிகளால், தமிழரசுக் கட்சிக்கு பின்டைவே அன்றி, எந்தவொரு தேர்தல் கால பயனும் இல்லை என்ற எண்ணம் நிலவுகிறது. அதிலும் குறிப்பாக அந்த உறுப்பு கட்சிகளே இவ்வாறு எண்ணுவது நகைப்பிற்குரியது. ஆனால், அவர்களே இந்த எண்ணவோட்டத்திற்கு அடிமை.

இதனால், அவர்கள் தமிழரசை கழற்றி விட வேண்டும் என்பதல்ல பொருள். வழமையாகவே, ஒவ்வொரு தேர்தல் காலத்திற்கு முன்பு, அவர்கள் முறுக்கி கொள்வதும், பின்னர் சம்பந்தனை தனியாகச் சந்தித்து பேசி, தங்களுக்குத் தேவையான ஆசனங்களைக் கேட்டுப் பெற்றுக் கொள்வதும் கூட தமிழ் அரசியல் நோக்கர்களுக்கு புளித்துப் போன விடயமே.

பிரச்சினையே, இந்த உறுப்பு கட்சிகளின் வாக்கு வங்கி இல்லாமல், தமிழரசுக் கட்சியும், கூட்டமைப்பும் எத்தனை நாடாளுமன்ற ஆசனங்களை வென்றிருப்பார்கள், என்பதுதான். தற்போதைய சூழலில், இந்த நிலை நீடித்தால், தமிழரசின் பங்காளிக் கட்சிகள் மற்றொரு தேர்தல் கூட்டணியை நோக்கி நகரமாட்டார்கள் என்பதற்கு உத்தரவாதமும் இல்லை.

### வாக்கு வங்கி அரசியல்

இதற்கு அப்பால் சென்று நோக்கினால், இனப்போருக்கு பிந்தைய கால கட்டத்திலும் கூட்டமைப்பின் தேர்தல் வெற்றிகளுக்கு தமிழரசுக் கட்சியின் வாக்கு வங்கியே முக்கிய பங்களிப்பை செய்திருந்தது. அதேசமயம், அண்மைக் காலங்களில், கூட்டமைப்பின் தொடர் தேர்தல் பின்னடைவுகளுக்கும், அந்த கட்சியே பொறுப்பு ஏற்க வேண்டும்.

ஆனால், அத்தகைய உணர்வே இல்லாமல், தமிழரசு தொடர்ந்து செயல்பட்டு வருகிறது. அந்தக் கட்சித் தலைவர்களுக்கு இது போன்ற எண்ணவோட்டத்தின் முக்கியத்துவம் புரியவில்லை. அதனை புரிந்து கொள்ளவேண்டும் என்ற உணர்வோ, கவலையோ அவர்கள் யாரிடமும் இல்லை.

உதாரணத்திற்கு ஒன்றை கூறலாம். கடந்த 2020 நாடாளுமன்ற தேர்தலில் கூட்டமைப்பு வெற்றிபெற்ற ஆசனங்களுக்கு அப்பால் சென்று நோக்கினால், அதன் வாக்கு வங்கி அதல பாதாளத்தில் இருப்பதை உணரலாம். அந்த தேர்தலில் கிளிநொச்சியை உள்ளடக்கிய யாழ்ப்பாண தேர்தல் மாவட்டத்தில், கூட்டமைப்பு பெற்ற மொத்த வாக்கு வெறும் 31.46 சதவீதம்தான். இதுவே வன்னி தேர்தல் மாவட்டத்தில் 33.64 சதவீதமாகவும், மட்டக்களப்பு மாவட்டத்தில் முந்தைய இரண்டு வாக்கு விகிதத்தையும் விட குறைவாக 26.66 சதவீதமாகவும் இருந்தது.



குமார்

இவற்றிற்கு அப்பால், அனைத்து சமூகத்தினரும் கணிசமான அளவில் வாழும் திருகோணமலை மாவட்டத்தில் கூட்டமைப்பு பெற்ற வாக்குகள் ஆக குறைந்த 18.58 சதவீதம் மட்டும்தான். இங்கு தான், கூட்டமைப்பின் தலைவர் சம்பந்தன் மிகக் குறைவான விருப்பு வாக்குகள் பெற்று தனது ஆசனத்தை தக்க வைத்துக் கொண்டார். இதுவே அவரது கடைசி தேர்தல் அரசியலாக இருக்கும் பட்சத்தில், கிழக்கு வாழ் தமிழர்கள், கூட்டமைப்பிற்கு கொடுத்த மரியாதையின் அளவுகோலாகவே இதனை கருத வேண்டும்.

### விருப்பு வாக்குகள் கூறும் கதை

இந்த பின்னணியில், கடந்த நாடாளுமன்றத் தேர்தலில் அரசு சார்ந்த சுதந்திர



விஜேவீரா

கட்சியின் வேட்பாளர் அங்கஜன் இராமநாதன் தமிழர் அரசியலின் தலைமை பீடம் என்று கருதப்படும் யாழ் மாவட்டத்தில் மிக அதிகமான விருப்பு வாக்குகளை பெற்றதை கூட்டமைப்பினர் கொச்சைப் படுத்துவதை நிறுத்திக் கொள்ள வேண்டும். இது போன்றே, முன்பு, அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவின் அதிகப்படியான விருப்பு வாக்குகளையும், கூட்டமைப்பினரும் பிற தமிழ்க் கட்சியினரும் குறை கூறி வந்திருக்கிறார்கள்.

இதனால் ஆகப் போவது ஒன்றுமில்லை. காரணம், வெற்றிக்கு வழி எதுவாயினும், ஜனநாயக அரசியலில் அவர்கள் பெற்றுக் கொண்ட ஆசனங்கள் தமிழர் தரப்பினருடையதே. அது போன்றே, அவர்களது பிரச்சார யுக்திகள் எதுவாக இருந்தாலும், அவற்றை ஏற்றுக்கொண்டு, அவர்களுக்குதங்களதுவிருப்புவாக்குகளை அதிகமாக வழங்குவதற்கு தமிழ் வாக்காளர்கள் தயாராக இருந்தார்கள் என்பதை மறுதலிப்பது பேதைமை.

அந்த விதத்தில், கடந்த நாடாளுமன்ற தேர்தலில், அங்கஜன் இராமநாதன் ஆக கூடிய அளவில் விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார். டக்ளஸ் தேவானந்தா இரண்டாவது குறைந்த விருப்பு வாக்குகளை பெற்றிருந்தார். இருவருமே அரசதரப்பினரை பிரதிநிதித்துவப்படுத்தினார்கள். அந்த விதத்தில் அரசு சார்ந்த வாக்குகள் ஒரு கட்சி அல்லது வேட்பாளரிடம் இருந்து இன்னொருவருக்கு போய் உள்ளது. பெருவாரியாகப் போய் உள்ளது அல்லது பிரிந்துள்ளது என்றே கருத வேண்டும்.

ஆனால், கடந்த தேர்தலில் இந்த இரண்டு வேட்பாளர்களின் வாக்குகளையும் கூட்டி பார்த்தால், போருக்கு பிந்தைய காலகட்டத்தில் முன்பு எப்போதும் இல்லாத அளவிற்கு அரசு சார்ந்த கட்சியினரின் மொத்த வாக்குகள் கூடி இருப்பதும் புரியும். அதுவும் குறிப்பாக, தமிழ் தேசிய கட்சிகள் அனைத்தும் எதிர் அரசியல் செய்யும் ராஜபக்ஷக்கள் ஆதரவு அரசியலுக்கு இங்கு கணிசமான வாக்கு வங்கி இருப்பது புலப்படும்.


இந்த அரசதரப்பு வாக்குகள் எல்லாமே, கூட்டமைப்பு உள்ளிட்ட தமிழ்த் தேசியம் பேசும் அரசியல் கட்சிகளுக்கு எதிரான வாக்குகள் என்றே கூற வேண்டும். இந்த வாக்குகளைத் தேர்தல் மாவட்டம் வாரியாக கணக்கிட்டால், கூட்டமைப்பு அல்லாத தமிழ்த் தேசியம் பேசும் கட்சிகள் ஒரு புறம், மற்றும் அரசு சார்ந்த கட்சிகள் அல்லது சிங்களவரின் எதிர்க்கட்சிகள் மறு புறம் என்று ஒரு புதிய ஒரு தேர்தல் வியூகம் கண்ணில் தெரியும். ஆனால், அவை குறித்தோ, அவற்றின் எதிர்கால தாக்கம் குறித்தோ, கூட்டமைப்பும் சரி, பிற தமிழ் கட்சிகளும் சரி, கவலைபடுவனவாகத் தெரியவில்லை.

### குண்டு சட்டிக்குள்...

இந்தப் பின்னணியில், முன்பு கூட்டமைப்பில் அங்கம் வகித்த கட்சிகள் மீண்டும் அதனோடு இணைந்து செயல்பட விரும்புவது வரவேற்கத் தக்க விடயம். அவ்வாறே பிரதமர் நரேந்திர மோடிக்கு எழுதிய கடித விவகாரத்தில், விக்னேஸ்வரன், சுரேஷ் பிறேமசந்திரன் மற்றும் ஸ்ரீகாந்தா, சிவாஜிலிங்கம் தரப்பு இணைந்து செயலாற்றியது, அவர்கள் தேர்தல் அரசியலின் முக்கியத்துவத்தைப் புரிந்துள்ளார்கள் என்பதையும் தெளிவுபடுத்தியது. ஆனால், யாழ் கருத்தரங்கில் பங்குபெறாததன் மூலம் தமிழரசு கட்சி தனது தன்னிச்சையான போக்கை மீண்டும் உறுதி செய்துள்ளது.

இந்த இரண்டு விடயங்களுமே, தமிழரசு அல்லாத பிற தமிழ்க் கட்சிகள், அதற்கு வைத்த ’செக்’ என்பது உண்மை. மற்றொரு விதத்தில், அது தமிழரசிற்கான ‘டெஸ்ட்’. இரண்டிற்கும் அப்பால் சென்று, இதுவே தமிழரசை கழற்றி விட்டுவிட்டு, கூட்டமைப்பின் பிற அங்கத்துவக் கட்சிகள் வேறொரு அரசியல் கூட்டணியை உருவாக்கலாம்.

அண்மையில் விக்னேஸ்வரனின் கட்சிக்கு தேர்தல் ஆணையத்தின் அங்கீகாரம் கிடைத்ததை தொடர்ந்து, அந்த கட்சிகளுக்கு தமிழரசின் வீடு சின்னத்திற்கு அப்பால் ஒரு பொதுவான தேர்தல் சின்னம் கிடைக்கும் வாய்ப்பை அந்த



கொப்பேகடுவ

கட்சி கருத்தில் கொள்ளவேண்டும். இதன் காரணமாகவும், விக்னேஸ்வரன் கட்சிக்கு கிடைத்துள்ள அங்கீகாரம் குறித்து, தமிழரசு ஆதரவாளர்கள் யாராவது உயர் நீதிமன்றத்தை நாடுவதற்கான சாத்தியங்கள் நிரம்பவே உள்ளன.

என்றாலும், ஆறு கட்சிகளின் யாழ் கருத்தரங்கில், விக்னேஸ்வரன் கூறியமை போல் அனைத்து தமிழ் அரசியல்வாதிகளும் ஒரு சேர நிற்பதற்கான காலம் கரைந்து வருகிறது. கனிந்தும் வருகிறது. அவர் கூறுவது என்னவோ, ‘கண் கெட்ட பிறகு, சூரிய நமஸ்காரம்’ வகையை சார்ந்ததுதான். என்றாலும், அதற்கு ஏற்ற மாற்று எதுவும் சமகால தமிழ் அரசியல் தலைமைகளிடம் இருப்பதாகத் தோன்றவில்லை.

### தானாக சேர்ந்த கூட்டம்?

அண்மையில் வட மாகாணம் விஜயம் செய்த முன்னாள் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனாவின் பொதுக் கூட்டத்திற்கு பெருத்த அளவில் கூட்டம் சேர்ந்ததாக பத்திரிகை செய்திகள் கூறின. அதற்கு சில தினங்களுக்கு முன்பாக, பதின்மூன்றாவது திருத்தத்திற்கு எதிரான கஜேந்திரகுமார் பொன்னம்பலத்தின் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் நடைபயணத்திலும் பொது கூட்டத்திலும் மக்கள் பெருவாரியாக கலந்து கொண்டனர்.

(11ஆம் பக்கம் பார்க்க)

உ
முருகன் துணை.

நல்லூர் சைவத் தமிழ்ப் பண்பாட்டுக் கலைக் கூடல்
# செவ்வழி நயனம்

# உண்மை பேசி நேர்மையாக வாழ்வோம்!

அன்பானவர்களே! நம்மால் இந்த உலகத்தில் நேர்மையாக வாழ முடியுமா என்று உங்களிடம் யாராவது கேட்டால் நீங்கள் என்ன சொல்வீர்களோ எனக்குத் தெரியாது.

நான், நிச்சயமாக முடியும் என்று தான் சொல்லுவேன்.

அதற்கு ஒரே ஒரு வழிதான் உண்டு. அதை நீங்களும் பின்பற்றினால் உங்களாலும் நேர்மையாக வாழ முடியும்.

அதுதான் அன்பர்களே! உண்மை பேசுதல்.

நாம் எமது வாழ்வில் உண்மை பேசினால், நிச்சயம் நேர்மையாக நம்மால் வாழ முடியும்.

அதில் எந்தவிதமான மாற்றுக் கருத்தும் இல்லை.

உண்மை பேசிப் பாருங்கள்!

எதற்குமே நாம் பயப்படத் தேவையில்லை.

எங்களுக்குள்ளே ஒரு பலம் நிறைந்திருக்கும்.

ஆனால் நாம் பொய் பேசிவிட்டால், அந்தப் பலம் எங்களை விட்டுத் தூர ஓடி நிற்கும்.

எப்போதும் எங்கள் மனம் சஞ்சலப்பட்ட வண்ணமே இருக்கும்.

நாம் பேசிய பொய்யை யாராவது கண்டு பிடித்துவிட்டால் எனக்கு அவமானம் ஆகி விடுமே என்ற எண்ணமே அந்த மனச் சஞ்சலத்திற்குக் காரணம்.

அதுவே நம் வாழ்வின் முழுமைக்கும் அவமானத்தைத் தேடித் தந்துவிடும்.

அன்பானவர்களே!

நமது பாடசாலை வாழ்க்கையாகட்டும், நம் எதிர்கால வாழ்க்கையாகட்டும். வாழுங் காலத்தில் எப்போதுமே நாம் உண்மை பேசினால் நிச்சயம் நேர்மையாக வாழலாம்.

அப்படிப்பட்ட வாழ்க்கை, நமக்கு அளவிட முடியாத மனச் சந்தோசத்தை நிச்சயம் தரும்.

இதை மீறினால் நிச்சயம் மனச் சஞ்சலமே நமக்கு மிஞ்சும்.

எமக்குரிய விருப்பமான பொருளை ஒருவர் எடுத்து வைத்துக்கொண்டு தன்னிடம் இல்லை என்று பொய் சொல்கிறார் என்பதை நீங்கள் புரிந்துகொண்டால் உங்கள் மனநிலை எப்படி இருக்கும்?

அதுபோலத்தானே நாமும் அந்தக் காரியத்தைச் செய்தால் பிறர் மனமும் துன்பப்படும்.

இதை நாம் மனதில் வைத்துக்கொண்டு எப்பொழுதும் உண்மையே பேச வேண்டும்.

உண்மை பேசுவது எப்போதும் உயர்வைத் தரும் என்பதை வாழ்க்கையில் நாம் மறக்கவே கூடாது.

உண்மை பேசி நாம் வாழ்ந்தால், நாம் வாழுகின்ற சமூகத்தில் நம் சொல்லுக்கும் செயலுக்கும் நிச்சயம் மதிப்பு உண்டாகும்.


உண்மை பேசி உத்தமர்களாய் வாழ்ந்தவர்களை இன்றும் இந்த உலகம் போற்றுகிறதல்லவா?

உண்மை பேசுபவர்களை இறைவனே நிச்சயம் விரும்புவான்.

அன்பானவர்களே! நேர்மையாக நாம் வாழ வேண்டும் என்றால் உண்மை பேசி ஆகவேண்டும்.

உண்மை என்பது எங்களுக்குள் எப்போதும் மன அமைதியைத் தரவல்லது.

மகாத்மா காந்தி பற்றி நாம் அனைவரும் கேள்விப்பட்டிருக்கிறோம் அல்லவா?




அவர் எப்போதும் உண்மையே பேசினார். அவர் உண்மையை நேசித்தார். அது அவருக்கு மிகுந்த மன வலிமையைக் கொடுத்தது. பாரத தேசத்தின் சிறந்த தலைவராக உருவெடுத்தார். இன்றும் அவர் வாழ்ந்த வாழ்வை உலகம் போற்றுகிறதல்லவா?

அன்பானவர்களே! நாமும் உண்மை பேசி நேர்மையோடு வாழ்வோம்.

- குணரட்ணம் சுதாகரன் -
(அபிவிருத்தி உத்தியோகத்தர்
இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களம்,
நாவலர் மணி மண்டபம், நல்லூர்)

# மகாமுத்ரா

வாரம் ஓர் ஆசனம்



**செய்முறை:-**

படி 1: வஜ்ராசனத்தில் அமரவும். இரு கைகளிலும் ஆதி முத்திரையை பிடித்தவாறு வயிற்றுப் புறத்தின் அடியில் வைக்கவும். (படத்தை பார்க்கவும்)

படி 2: மூச்சை வெளிவிட்டபடி முன்புறமாக குனிந்து நெற்றியால் தரையைத் தொடவும். உச்ச நிலையில் சாதாரணமாக சுவாசிக்கவும்.

படி 3: பின்னர், மூச்சை இழுத்தவாறு நிமிரவும். இவ்வாறு 03 முறைகள் செய்யவும்.

பலன்கள்:- அடி வயிற்றிலுள்ள தேவையற்ற அழுக்குகள், கொழுப்புகள் நீங்கி அது சம்பந்தமான நோய்களை குணமாக்கும். வயிற்றுப் பகுதியிலுள்ள சகல உள்ளுறுப்புகள், நரம்பு மண்டலங்களைத் தூண்டுகின்றது. பெண்களுக்கு ஏற்படுகின்ற மாதவிடாய் முதலிய இனப்பெருக்க உறுப்புகளுடன் தொடர்புடைய பல்வேறு பிரச்சினைகளுக்கும் சிறந்த பலனைக் கொடுக்கும். கர்ப்பப்பை, சூலகம், சூலக குழாய்கள் பலமடையும். மலச்சிக்கல் நீங்கும், இருதய பலவீனம், மார்புச் சளி குணமாகும்.

- ஸ்ரீ. நதிபரன் - (யோகா போதனாசிரியர், நல்லூர் திவ்ய ஜீவன சங்கம்)



# கோளறு பதிகம்



பாடல் - 03
ஓவியமும் விளக்கமும் : பத்மவாசன்

**உருவளர் பவளமேனி ஒளி நீறணிந்து**
**உமையோடும் வெள்ளை விடைமேல்**
**முருகலர் கொன்றைதிங்கள் முடிமேல் அணிந்தென்**
**உளமே புகுந்த அதனால்**
**திருமகள் கலையதூர்தி செயமாது பூமி**
**திசை தெய்வமான பலவும்**
**அருநெதி நல்லநல்ல அவைநல்ல நல்ல**
**அடியார் அவர்க்கு மிகவே.**

**பொழிப்பு :**
பார்க்கப் பார்க்க அழகு வளர்ந்துகொண்டே இருக்கின்றதும், மின்னும் பவளம் போன்றதுமான சிவந்தமேனியும் அதில் ஒளிரும் திருநீற்றை அணிந்தவரும், உமையம்மையுடன் வெள்ளை எருது மேல் ஏறிவருபவரும், வாசனையுடனான கொன்றைப் பூக்களையும் பிறையையும் திருமுடிமேல் அணிந்தவருமான சிவபெருமானார் என் உள்ளப் பெருங்கோயிலிற் புகுந்து அமர்ந்து கொண்ட அதனால் மஹாலஷ்மிதேவி, சரஸ்வதி தேவி, வெற்றி தரும் தேவியான துர்க்கை, பூமா தேவி, எட்டுத்திக்கு அதிபதிகளான இந்திரன், அக்கினி, இயமன், நிருதி, வருணன், வாயு, குபேரன், ஈசான்யன் போன்றோரும் இவர்கள் தவிர, இருக்கும் மற்ற பல தெய்வங்களும் ஆயுள், ஆரோக்கியம், திரவியம் போன்ற அருஞ்செல்வங்களையே அருள்வதோடு, அவர்களே பெருஞ் செல்வங்களாக அடியார்களுடன் இருந்து அவர்களுக்கு நல்லன, நல்லன, மிகுந்த நல்லனவே செய்வர்.

(இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்கள வெளியீட்டிலிருந்து...)

# நல்லைக் கந்தன் கழற்கோர் கவிமாலை

தானதன தான தன்ன தானதன தான தன்ன
தானதன தான தன்ன - தனதான

அருவரை யுடைசெயு முனபரி செனவரு
அமருல குளகஜ - மகளோடு
அதிசுவை யுளதினை வனகுற மகளென
அழகொடு உலவிடு - குறமாதும்
மருவிட அருளது தரஒரு உருவொடு
வருமடி தொழுதிரு - பெறுவேனோ?
மதியணி சடையுடை பதியிரு செவியது
மறைபொரு ளுரைசெயு - குருநாதா
கருவறு பிணியற கவுரிய ளளிகர
கணையுரு அருளிடு - முருகோனே
கதியிலை யெனவரு மடியவர் கதிபெற
கழலிணை யருளிடு - குமரேசா
இருவினை யதுதரு துயரற அழகொடு
இவரிடு மையிலது - வருவோனே
இகமிடி கெடவருள் தரவென அழகுநல்
லயிலுறை அறுமுக - பெருமானே!

- கவிஞர் இராசையா குகதாசன் -

## நாடாளுமன்றத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நேற்று இடம்பெற்ற வனஜீவராசிகள் சட்ட ஒழுங்குவிதிகள் மீதான விவாதத்தின் போதே தமிழ் எம்.பிக்கள் சபைக்குள் பதாகைகளை ஏந்தியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இந்த விவாதத்தில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரான சார்ள்ஸ் நிர்மலநாதன் உரையாற்றிய பின்னரே பதாகைகளுடன் எழுந்த தமிழ் எம்.பி.க்கள், "பறிக்காதே பறிக்காதே காணிகளைப் பறிக்காதே, தமிழர் நிலங்களைப் பறிக்காதே" எனக் கோஷங்களை எழுப்பியவாறு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களான சிவஞானம் சிறிதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன், எஸ். வினோநோகராதலிங்கம், எம்.ஏ.சுமந்திரன், இரா.சாணக்கியன், த.கலையரசன் மற்றும் தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், செல்வராசா கஜேந்திரன் ஆகியோர் இந்த ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

இதனால் விசனமடைந்த விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சரான சி.பி. ரத்நாயக்கவும், இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்கவும் இந்த ஆர்ப்பாட்டத்தை உடனடியாக நிறுத்துமாறு சபைக்குத் தலைமை தாங்கிக்கொண்டிருந்த நாடாளுமன்றக் குழுக்களின் பிரதித் தலைவரான அங்கஜன் இராமநாதனிடம் வலியுறுத்தினர்.

அவரும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட எம்.பி.க்களைக் கட்டுப்படுத்த முயன்ற போதும் அவர்கள் உரத்த குரலில் கோஷங்களை எழுப்பிக்கொண்டிருந்தனர்.

ஜெனிவா அமர்வுக்காகவே இந்த ஆர்ப்பாட்டத்தை தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முன்னெடுக்கின்றனர் எனவும், தமிழ் மக்கள் மீதி இவர்களுக்கு எந்த அக்கறையும் கிடையாது எனவும் இராஜாங்க அமைச்சர் செஹான் சேமசிங்க குற்றஞ்சாட்டினார்.

நாடாளுமன்ற சம்பிரதாயம் தெரியாதுவிட்டால் சுமந்திரன் எம்.பியிடம் கேட்டுத் தெரிந்துகொள்ளுமாறும் அவர் கூறினார்.

இதன்பின்னர் விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சர் சி.பி. ரத்நாயக்க மக்களுக்குச் சொந்தமான காணிகள் சுவீகரிக்கப்படாது என வழங்கிய உறுதிமொழியையடுத்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் ஆர்ப்பாட்டத்தைக் கைவிட்டனர்.

---

## யாழில் ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

நோக்கிச் சென்ற குளிரூட்டப்பட்ட ரயில் மீது மோதியே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது.

நேற்று இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் அதே பகுதியைச் சேர்ந்த ராஜ்குமார் ஜெயந்தி என்ற இளம்பெண்ணே உயிரிழந்துள்ளார்.

கொக்குவில் தொழில்நுட்பக் கல்லூரிக்கு அருகிலுள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோதே குறித்த விபத்து இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவத்தில் உயிரிழந்த பெண்ணின் தந்தை ராஜ்குமார் என்பவரும் காயமடைந்த நிலையில் வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

---

## பயங்கரவாதத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

அ.சா.அரியகுமார், உள்ளூராட்சி சபைகளின் உறுப்பினர்கள், வடக்கு மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் ச.சுகிர்தன், பருத்தித்துறை முன்னாள் கோட்டக்கல்வி அதிகாரி ச.திரவியராசா மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

## வீட்டில் மறைத்து...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

திருட்டுத் தனமாக ஓர் வீட்டில் மறைத்து வைத்திருந்த சமயம் பொலிஸாருக்குக் கிடைத்த தகவலின் பெயரில் இவை கண்டு பிடிக்கப்பட்டன. இந்த விடயத்தை மன்னார் பொலிஸார் மன்னார் நீதிமன்றத்தின் கவனத்திற்குக் கொண்டு சென்றனர்.

இந்த வழக்கை ஆராய்ந்த மன்னார் நீதிவான் 5 ஆமைகளையும் வனஜீவராசிகள் திணைக்களத்திடம் ஒப்படைத்து அவர்களின் அறிக்கையை சமர்ப்பிக்கக் கட்டளையிட்டார்.

நீதிமன்றின் கட்டளையின் பெயரில் மன்னார் மாவட்ட வன ஜீவராசிகள் திணைக்களத்திளத்திடம் ஒப்படைக்கப்பட்ட 5 ஆமைகளையும் ஆராய்ந்த வன ஜீவராசிகள் திணைக்களம், இலங்கையில் பல வகையான ஆமைகள் காணப்பட்டாலும், இந்த வகையான ஆமைகள் மிகவும் அரிய கிறீன் ஒளிசீட்டர் வகை நல்லின ஆமைகள் எனவும், இவை தொடர்ந்தும் நீண்டகாலம் வளரக்கூடியவை எனவும் நீதிமன்றிற்கு அறிக்கையிட்டனர்.

இதேநேரம் ஆமைகளின் வழமையான ஆயுள் காலம் 100 ஆண்டுகளையும் கடந்தது எனக் கூறப்பட்டது. இந்த 5 ஆமைகளும் 30 வயதிற்கும் உட்பட்டவை என்பதோடு இந்த ஆமைகளின் தற்போதைய பெறுமதி ரூ.3 லட்சத்தை தொடும் என வன ஜீவராசிகள் திணைகள அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

இதேநேரம் மிகவும் அரிய வகையில் ஒரே இன ஆமைகளை மறைத்து வைத்து பராமரித்தமையினால் இவற்றை வேறு இடங்களிற்கு கடத்தும் நோக்கம் சம்பந்தப்பட்டோருக்கு இருக்கலாம் எனவும் சந்தேகிக்கப்படுகின்றது.

இவற்றினை ஆராய்ந்த மன்னார் மாவட்ட நீதிபதி 5 ஆமைகளையும் பொலிஸாரின் முன்னிலையில் கடலில் விடுமாறு வன ஜீவராசிகள் திணைகள அதிகாரிகளுக்கு உத்தரவிட்டமைக்கு அமைய 5 ஆமைகளும் நேற்று மன்னார் மவட்டக் கடலில் விடப்பட்டன.

---

## உக்ரைன் மீது...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மீது ரஷ்ய ஏவுகணைகள் சரமாரியாகப் பாய்ந்து தாக்குவதால் உச்சக்கட்ட பதற்ற நிலை உருவாகியுள்ளது.

ரஷ்யாவின் பாதையில் குறுக்கிடுபவர்கள் வரலாறு காணாத அளவு மோசமான பாதிப்புகளை சந்திக்க நேரிடும் என்று ரஷ்ய ஜனாதிபதி புடின் எச்சரித்துள்ளார்.

உக்ரைன் நாட்டில் தாக்குதல் நடத்தும் ரஷ்யாவுக்கு அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார். ஆனால், ரஷ்யாவின் பாதுகாப்பில் எவ்வித சமரசமும் செய்து கொள்ள முடியாது என ரஷ்ய ஜனாதிபதி புடின் திட்டவட்டமாக தெரிவித்துள்ளார்.

ரஷ்யாவின் பாதையில் குறுக்கிடுபவர்கள் வரலாறு காணாத அளவு மோசமான பாதிப்புக்களைச் சந்திக்க நேரிடும் என்றும் புடின் எச்சரிக்கை விடுத்துள்ளார்.

அத்துடன், உக்ரைனை ஆக்கிரமிப்பது ரஷ்யாவின் நோக்கமல்ல. அங்கு அமைதியை ஏற்படுத்துவதே எங்கள் நோக்கம். நேட்டோவில் உக்ரைனைச் சேர்க்கக் கூடாது என்ற எங்கள் கோரிக்கையை அமெரிக்காவும் அதன் கூட்டு நாடுகளும் ஏற்கவில்லை என்றும் புடின் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

உக்ரைன் விவகாரத்தில் அடுத்தகட்ட நடவடிக்கை குறித்து விவாதிக்க ஜி – 7 நாடுகளின் அவசர கூட்டத்துக்கு அமெரிக்கா அழைப்பு விடுத்துள்ளது. அத்துடன், நேட்டோ கூட்டணி நாடுகளின் தலைவர்களுடனும் அமெரிக்க ஜனாதிபதி பைடன் அவசர ஆலோசனை நடத்துகின்றார்.

# தமிழ் எம்.பிக்கள் போராட்டம் ஜெனிவாவுக்கான சூழ்ச்சியாம்

## ஜனாதிபதி ஊடகப்பிரிவு கூறுகின்றது

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களின் எதிர்ப்பு நடவடிக்கை, ஐ.நா. மனித உரிமைகள் கூட்டத் தொடரில் அரசுக்கு எதிரான கருத்தை ஏற்படுத்தும் சூழ்ச்சி என ஜனாதிபதி ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

எவ்வித முன்னறிவித்தலும் இன்றி ஜனாதிபதி செயலகத்துக்கு முன்பாக நேற்று எதிர்ப்பு நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது என ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதியைச் சந்தித்து மகஜரைக் கையளிக்க வேண்டும் எனத் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்த போதிலும், ஜனாதிபதியைச் சந்திக்க வருகை தருவதாக முன்னறிவித்தல் வழங்கப்படவில்லை என அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஏற்கனவே திட்டமிடப்பட்ட செயற்றிட்டமொன்றுக்காக ஜனாதிபதி நேற்று முற்பகல் சென்றார் எனவும் ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பிரதமரைச் சந்திப்பதற்கான அனுமதி வழங்கப்பட்ட போதிலும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்கள் ஜனாதிபதி செயலகத்திற்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர் என்று அதில் கூறப்பட்டுள்ளது.

ஜனாதிபதி தமது அலுவலகத்தில் இல்லாத சந்தர்ப்பத்தில், எவ்வித முன்னறிவித்தலும் இன்றி எதிர்ப்பு நடவடிக்கையில் ஈடுபட்டமை, ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபைக் கூட்டத்தொடரில் அரசுக்கு எதிரான தவறான கருத்தை ஏற்படுத்தும் சூழ்ச்சியாகக் கருதுவதாக ஜனாதிபதி ஊடகப்பிரிவு விடுத்துள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

## சுட்டு வீழ்த்தப்பட்டன 5 ரஷ்ய விமானங்கள்

### உக்ரேன் அறிவிப்பு

ரஷ்யா – உக்ரேன் போர் மூண்டுள்ள நிலையில், ரஷ்யாவின் 5 விமானங்கள் மற்றும் ஒரு ஹெலிக்ஹொப்டர் ஆகியன சுட்டு வீழ்த்தப்பட்டன என்று உக்ரேன் இராணுவத்தினர் அறிவித்துள்ளனர்.

அத்துடன், உக்ரேன் ஆயுதப்படை வெளியிட்ட அறிக்கையில், அமைதியாக இருங்கள். உக்ரேன் ஆதரவாளர்களை நம்புங்கள் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனினும், ரஷ்ய விமானங்கள் சுட்டு வீழ்த்தப்பட்டன என்று உக்ரேன் கூறுவதை ரஷ்ய பாதுகாப்பு அமைச்சு மறுத்துள்ளது.

## கருத்தமர்வு

வடக்கு மாகாண இளைஞர் அலகினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள Zoom செயலி ஊடாக யாவர்க்கும் நலம் எனும் நிகழ்ச்சித் தொடரானது சனிக்கிழமை தோறும் மாலை 7.00 மணி - 9.00 மணி வரை இடம்பெறுகின்றது.

இந்த வாரத்துக்கான கருத்தமர்வுகளை நாளை "பெருந்தொற்றுக் காலத்திற்குப் பின்னரான கண் ஆரோக்கியம்" - எனும் தலைப்பில் நடைபெறவுள்ளது.

Meeting ID-89985282023

Passcode-354485

விளம்பரத் தொடர்புகளுக்கு -
மின்னஞ்சல் -
kalaikkathiradvt@gmail.com
தொலைபேசி இலக்கம் -
076 443 8622

## மரண அறிவித்தல்



பிறப்பு: 13/11/1930 இறப்பு: 22/02/2022

**Dr. பரமநாதன் விக்னேஷ்வரா**

யாழ்- கொழும்புத்துறை சுவாமியார் வீதியை பிறப்பிடமாகவும், யாழ் - நீராவியடி பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும், சுன்னாகம் புகழ் Dr. பரமநாதன் விக்னேஷ்வரா 22/2/22 சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற பரமநாதன் தங்கரத்தினத்தின் அன்புமகனும், தர்மலிங்கம் மனோன்மணியின் மருமகனும், பாசமிகு விமலாதேவியின் கணவரும், அருணா, குமார ராஜன், அமுதன், ஐங்கரன், அகிலா, அரவிந்தன் ஆகியோரின் அன்பு அப்பாவும் ஆவார்.

நந்தகோபாலன், சுகன்யா, பத்மாவதி, கஜந்தி, வதனன் ஆகியோரின் மாமனாரும், துளசி, அஞ்சன், அபிஷேக், கவியரன், அர்ச்சனா, சாலினி, யாழினி, விஷ்வன், யதுஷன் ஆகியோரின் அன்புப்பேரனுமாவார்.

காலஞ்சென்ற ஆனந்தநாயகி- திருஞானசோதி,காலஞ்சென்ற கனகேஸ்வரி- இராஜலிங்கம ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஞானாம்பிகை, சிவஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் எதிர்வரும் பெப்ரவரி 27ம் திகதி ஞாயிற்றுக்கிழமை Magnolia chapel Macquarie Park Cemetery and Crematoriumஇல் காலை 11:00 முதல் 2:00 மணி வரை நடைபெறும் என்பதை ஆழ்ந்த வருத்தங்களுடன் தெரிவித்துக் கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு:**

குமார ராஜன்: 0402 874 156
ஐங்கரன்: 0413459842
அமுதன்: 0420 455 363
அரவிந்தன்: 0413 193 001

காலைக்கதிர் Kalaikkathir

# காணி அபகரிப்பு குறித்து ஜனாதிபதிக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் இதுவரையில் நடவடிக்கை இல்லை!



## சுமந்திரன் எம்.பி. காட்டம்

காணி அபகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷக்கு பல தடவைகள் அறிவித்த போதிலும் இதுவரையில் எவ்வித நடவடிக்கையும் எடுக்கப்படவில்லையென தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் காட்டத்துடன் தெரிவித்தார்.

காணி அபகரிப்புக்கு எதிர்ப்பு தெரிவித்து வடக்கு, கிழக்கு மாகாணங்களைப் பிரதிநிதித்துவப்படுத்தும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் கொழும்பில் நேற்று (வியாழக்கிழமை) போராட்டமொன்றை முன்னெடுத்தனர்.

இந்தப்போராட்டத்தில்கலந்துகொண்டு கருத்து வெளியிடும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

காணி அபகரிப்பு தொடர்பாக ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன் ஒரு வருடத்துக்கு முன்பாகவே இரண்டு கடிதங்களை அனுப்பினார் எனவும் எனினும் இதுவரையில் இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதியிடமிருந்து எந்தவிதமான பதிலும் கிடைக்கவில்லையென்றும் அவர் குறிப்பிட்டார்.

தொடர்ச்சியாக இந்த விடயம் பற்றி எழுத்து மூலமாக அறிவித்தும் சமல் ராஜபக்ஷவுடன் சந்திப்புக்களை மேற்கொண்டும் தொடர்ச்சியாக காணி அபகரிப்பு முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் அவர் குற்றம்சாட்டினார்.

இதன் காரணமாகவே, இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட தீர்மானித்தோம் என அவர் தெரிவித்தார்.

## கொவிட்டுடன் தொடர்புடைய 'மிஸ் சி' நோய் குழந்தைகளை பாதிக்கலாம்!

கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் பிள்ளைகளுக்கு கொரோனாத் தொற்றுடன் தொடர்புபட்ட மிஸ் சி குழந்தைகளில் மல்டி சிஸ்டம் இன்ப்ளமேட்டரி சிண்ட்ரோம் நோய் வருவதற்கான வாய்ப்புகள் அதிகம் உள்ளன என சுகாதாரத்துறை தெரிவித்துள்ளது.

இது பிற்காலத்தில் பாரிய சிக்கல்களை ஏற்படுத்தும் என லேடி ரிட்ஜ்வே சிறுவர் வைத்தியசாலையின் விசேட வைத்திய நிபுணர் தீபால் பெரேரா சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த விடயம் தொடர்பாக ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்துள்ளஅவர் –

குழந்தைகளுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்படாவிட்டால் நோய் நிலைமை மோசமடைந்து சிக்கல்கள் ஏற்படும் அபாயம் உள்ளதாகத் தெரிவித்துள்ளார்.

எனவே, 5 வயதுக்கு மேற்பட்ட பிள்ளைகளுக்கு விரைவில் கொரோனாத் தடுப்பூசி வழங்க எதிர்பார்த்திருப்பதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

## கழுதை ......

(08ஆம் பக்கத் தொடர்ச்சி)

இந்த இரு நிகழ்ச்சிகளிலும் சேர்ந்த மக்கள் கூட்டத்தைக் கூட்டமைப்பினரும் பிறரும் உதாசீனப்படுத்தினால், அதன் விளைவை அவர்களே எதிர்வரும் தேர்தல்களில் சந்திக்க வேண்டி இருக்கும். அதே நேரத்தில், இதன் தாக்கம் எதிர்காலத்தில், கூட்டமைப்பு என்று மட்டும் அல்லாது, தமிழ் தேசியக் கட்சிகளின் தேர்தல் எதிர்காலத்தையே பாதிக்கக் கூடும்.

பல்லில்லாத பாம்புகளாக அவர்கள் மாறினால், அதன் பயனை தென்னிலங்கை அரசியல் தலைமைகளே அனுபவிப்பார்கள். இனப் போருக்கு முந்தைய காலகட்டத்தில், 1982 நடைபெற்ற முதல் ஜனாதிபதி தேர்தலில் யாழ் தேர்தல் மாவட்டத்தில்; அன்று பதவியில் இருந்த ஜே.ஆர்.ஜெயவர்த்தனவை (20.54 சதவீதம்) விட, தற்போது சிறிசேனா தலைமையிலான ஒன்றுபட்ட சுதந்திரக் கட்சி வேட்பாளரான ஹெக்டர் கொப்பேகடுவா அதிக வாக்குகள் (35. 46 சதவீதம்) பெற்றார்.

அன்று சுதந்திரக் கட்சியின் தலைவரான சிறிமாவோ பண்டாரநாயக்காவின் குடிமை உரிமைகள் பறிக்கப்பட்டிருந்தமையால், அவரால் களமிறங்க முடியவில்லை. அவரால் தேர்தலில் கலந்து கொள்ள முடிந்திருந்தால், அவர் கொப்பேகடுவாவை விட அதிக வாக்குகள் பெற்றிருப்பார் என்று கருதப்பட்டது. அந்த அதிகப்படியான வாக்குகள் ஒன்றுபட்ட தமிழர் வேட்பாளரான குமார் பொன்னம்பலத்தின் வாக்கு வங்கியில் இருந்தே பிரித்தெடுக்கப்பட்டிருக்கும் என்றும் ஒரு கருத்து நிலவியது.

இந்த உண்மைகளை தமிழர் தலைமைகள் எப்போதோ மறந்து விட்டார்கள். ஆனால். தென்னிலங்கை அரசியல் தலைமைகள் என்றுமே மறந்து விடவில்லை. காரணம், முந்தைய 1976 வட்டுக்கோட்டை தீர்மானத்திற்கு பின்னர் நடைபெற்ற அந்த தேர்தலில் தற்போதைய தமிழ் தேசிய முன்னணி தலைவரான கஜேந்திரகுமாரின் தந்தையான குமார் பொன்னம்பலம், யாழ் தேர்தல் மாவட்டத்தில் முன்னிலை வகித்தார். ஆனால் அவர் 40.3 சதவீதம் வாக்குகள் மட்டுமே பெற்றிருந்தார். அந்த விதத்தில், ஜே.வி.பி. தலைவரான றோஹண விஜயவீராவையும் சேர்த்து ஐந்து தென்னிலங்கை வாக்காளர்கள் பெற்ற மொத்த வாக்கு எண்ணிக்கை யாழ் தேர்தல் மாவட்டத்தில் 60 சதவீதமாக இருந்தது.

இனப்போர் காரணத்தினால், அந்த வாக்கு வங்கிகளுக்கு தற்போது இங்கு இடமில்லை என்பது போல தமிழர் தரப்பு கட்சிகள் எண்ணி, செயல்பட்டு வருகின்றன. இதுவே அவர்களது உள்வீட்டு உள்குத்துகளுக்கும் காரணம். ஆனால், 2020 நாடாளுமன்றத் தேர்தல் நிலைமை நிலைபெற்று, பின்னர் முன்னேறுமேயானால், அதனால், தமிழர் கட்சி பிரதிநிதித்துவம் என்பது மட்டுமல்ல, தமிழ் தேசிய அரசியலும் காணாமல் போய்விடும்.

இவை அனைத்தையும் இன்றைய தமிழர் தலைமைகள் எப்போதும் நினைவில் கொள்ள வேண்டும். ஆனால், அவர்கள் தனித்தும், ஒன்றாகவும், கழுதை தேய்ந்து கட்டெறும்பாக மாறி வருகிறார்கள். அதனைப் பற்றி, அந்தந்த கட்சிகளின் தலைமைகளும் சரி, அவர்களுடைய தொண்டர்களும் (?) சரி, வாக்காளர்களும் சரி, கவலைபடுபவர்களாவோ, உணர்ந்து செயலாற்றுபவர்களாவோ தெரியவில்லை!

## வெல்லாவெளி பிரதான வீதியை புனரமைக்க மக்கள் கோரிக்கை



மட்டக்களப்பு மாவட்டத்தின் போரதீவுப்பற்று பிரதேச செயலாளர் பிரிவுக்குட்பட்டப் பகுதியில் நீண்ட காலமாகப் புனரமைக்கப்படாமல் உள்ள வெல்லாவெளி பிரதான வீதியைப் புனரமைத்து தருமாறு பிரதேச மக்கள் அரசாங்கத்திடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

யுத்தத்தின் பின்னர் தற்காலிகமாகப் புனரமைக்கப்பட்ட வெல்லாவெளி – பக்கியல்ல பிரதான வீதி நீண்ட காலமாக மிகவும் மோசமான நிலையில் காணப்படுவதால் தினமும் அந்த வீதியைப் பயன்படுத்தும் மக்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொண்டு வருகின்றனர்.

விவசாயிகள் அதிகளவில் வாழும் மேற்படி பகுதி ஊடாக விதைப்பு காலத்திலும், அறுவடை காலத்திலும் விவசாயிகள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றோம் எனத் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதியின் ஊடாக பஸ் மற்றும் ஏனைய போக்குவரத்துகள் மிகவும் கஷ்டமான நிலையிலேயே முன்னெடுக்கப்படுகின்றன எனவும், கர்ப்பிணிப் பெண்களை ஏற்றிச்செல்லும் போது பெரும் கஷ்டங்களை அவர்கள் எதிர்கொள்கின்றனர் எனவும் சாரதிகள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியூடாகப் பாரிய கன்டர் வாகனங்களில் மண் ஏற்றிச்செல்வதால் மேலும் வீதிகள் பாதிக்கப்படுகின்றன எனவும், இதனை நிறுத்தாவிட்டால் எதிர்காலத்தில் அந்தப் பகுதியில் முன்னெடுக்கப்படும் மண் அகழ்வைத் தடுத்து நிறுத்தப் போராட்டம் நடத்த வேண்டிய நிலையேற்படும் எனவும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

மேற்படி வீதி குன்றும் குழியுமாகக் காணப்படுவதன் காரணமாக மழைக் காலங்களில் பயணங்களை மேற்கொள்வதில் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றோம் எனவும், அப்பகுதி மக்கள் தெரிவிக்கின்றனர்.

இந்த வீதியைப் புனரமைத்து வழங்குவதற்கு உரிய அதிகாரிகளும் அரசியல்வாதிகளும் நடவடிக்கையெடுக்கவேண்டும் எனவும் பொது மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

பாடசாலை செல்லும் போது மாணவர்கள் பெரும் கஷ்டங்களை எதிர்கொள்கின்றனர் எனவும் வீதி மோசமான நிலையிருப்பதால் முறையான போக்குவரத்துகள் இல்லாத நிலையே உள்ளதாகவும் மாணவர்கள் தெரிவிக்கின்றனர்.

## டுபாய் எக்ஸ்டே கண்காட்சியின் சபாயர் தினம் பிரதமர் மஹிந்தவுக்கு விளக்கமளிக்கப்பட்டது

டுபாய் எக்ஸ்போ கண்காட்சியில் எதிர்வரும் 26ஆம் திகதி நடைபெறவுள்ள சபாயர் தினம் தொடர்பில் விளக்கமளிப்பதற்கு இரத்தினக்கல் மற்றும் ஆபரணச் சங்கத்தின் பிரதிநிதிகள் அலரி மாளிகையில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்தனர்.

இலங்கையின் நீல இரத்தினக்கற்களுக்குக் காணப்படும் உலகளாவிய கேள்வியைக் கருத்திற்கொண்டு நீல இரத்தினக்கற்களுடன் சுற்றுலாத்துறையை மேம்படுத்துவது இதன் பிரதான நோக்கமாகும்.

அதற்கமைய பெப்ரவரி 26 ஆம் திகதி டுபாய் எக்ஸ்போ கண்காட்சியின் இலங்கை கண்காட்சி கூடம் சபாயர் தினத்தை முன்னிட்டு ஒதுக்கப்படுவதுடன், அங்கு இந்நாட்டின் பிரதான இரத்தினக்கல் மற்றும் ஆபரண வர்த்தகர்கள் 11 பேரால் மிகவும் மதிப்புமிக்க 25 இரத்தினக்கற்கள் இதன்போது காட்சிப்படுத்தப்பட்டன.

இந்தக் கண்காட்சியின் போது இலங்கையின் இரத்தினக்கல் மற்றும் சுற்றுலாத்துறையை மேம்படுத்தும் வகையில் தயாரிக்கப்பட்ட சபாயர் ஸ்ரீலங்கா எனும் சிறப்பு காணொலி காட்சிபடுத்தப்படவுள்ளதாக பிரதமருக்குத் தெரிவிக்கப்பட்டது.

இலங்கையின் சுற்றுலா இடங்கள் மற்றும் கலாசாரக் கூறுகளை இணைத்து உருவாக்கப்பட்டுள்ள இந்த காணொலியானது, சுற்றுலாப் பயணிகளின் வருகையை ஊக்குவிப்பதுடன், நாட்டைவிட்டு வெளியேறும் போது நினைவுப் பரிசாக இரத்தினக்கல்லை கொள்வனவு செய்யவும் இதனூடாக அழைப்பு விடுக்கப்படுகிறது.

இரத்தினக்கல் கண்காட்சிக்கு முந்தைய தினம் இன்று, இரத்தினக்கல் மற்றும் ஆபரணங்கள் தொடர்பான உலகப் புகழ்பெற்ற நிபுணரான ஹெலன் மோல்ஸ்வொர்த் இலங்கையில் உள்ள நீல இரத்தினம் உள்ளிட்ட விலைமதிப்பற்ற இரத்தினக்கற்கள் தொடர்பாக விரிவுரையொன்று நடத்தப்படவுள்ளது. இதற்காக அனைத்து சர்வதேச ஊடகங்களுக்கும் அழைப்பு விடுக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்தச் சந்தர்ப்பத்தில் இராஜாங்க அமைச்சர் லொஹான் ரத்வத்தே, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண அதிகாரசபையின் தலைவர் திலக் வீரசிங்க, இலங்கை இரத்தினக்கல் மற்றும் ஆபரண சங்கத்தின் தலைவர் அஜ்வாட் டீன், உப தலைவர் அல்தாப் இக்பால், திட்ட பிரதானி ரொஷேன் வீரரத்ன உள்ளிட்டோர் கலந்துகொண்டனர்.

இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 25.02.2022இல் வெளியிடப்பெற்றது.



இக்கட்டுரையாளர் செல்லத்துரை ரவீந்திரன் சிரேஷ்ட சட்டத்தரணி. ஆஸ்திரேலியாவைத் தளமாகக் கொண்டு இயங்கும் இலங்கை புலம்பெயர் சட்டவாளர். இலங்கையில் சன்சோனிக் கமிஷன் விசாரணைகளில் தமிழர் தரப்பில் பிரதான பங்காற்றிய சட்டத்தரணி. தமிழ் புனர்வாழ்வுக் கழகத்தின் பிதாமகர்களுள் ஒருவர். தமிழரின் உரிமைப் போராட்டத்துடன் நெருக்கமாகச் செயற்பட்ட – செயற்படுகின்ற – புலமையாளர். 'இனப்படுகொலை', 'இனச்சுத்திகரிப்பு' ஆகிய பதங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்களை விளக்குகின்றது அவரது இந்தக் கட்டுரைத் தொடர். இந்தக் கட்டுரைத் தொடருக்கான ஆய்வுக் குறிப்புகளைத் தேடித் தந்துதவியவர் சட்டத்தரணி நிர்மலா பேர்னாட் யோசப். அவர் தற்போது மனிதாபிமானச் சட்டங்கள் தொடர்பான சர்வதேச பரிமாணங்கள் பற்றிய தமது முதுநிலைப்பட்ட ஆய்வை ஆஸ்திரேலிய பல்கலைக்கழகம் ஒன்றில் மேற்கொண்டு வருகின்றார். அவர் முன்னர் இலங்கையில்மாற்றுக் கொள்கைகளுக்கான மையத்துடன் சேர்ந்து இயங்கியவர் என்பதும் குறிப்பிடத்தக்கது.

- செல்லத்துரை ரவீந்திரன் -

## அங்கம் - 291

# இனப் படுகொலையும் தமிழ் மக்களின் அரசியலும்

**733.ராஜபக்ஷாக்களின் புதிய உத்தேச அரசமைப்பு, இந்திய ஒப்பந்தத்தில் இணங்கப்பட்டவற்றை, தந்திரோபாயமாக விலத்தி, மீண்டும் ஒற்றையாட்சியை பலப்படுத்துவதாக இருக்குமா?**

அதில் சந்தேகமில்லை. அதனை இந்தியாவோ, சர்வதேசமோ புரியாமலில்லை. ஆனால் ராஜபக்ஷக்கள், தமது நாட்டு மக்கள், தமக்குத் தேவையான, தங்களது இயல்பிற்கு ஆதரவான, அரசமைப்புச் சட்டத்தை தங்களது பெரும்பான்மையால் நிறைவேற்றுவது அவர்களது இறைமை, அதனைத் தான் அவர்கள் செய்ய விரும்புகிறார்கள் எனக் கோடி காட்டுகின்றார்கள்.

அந்த இறைமையில் ஐ.நா. அங்கத்துவ நாடுகள் தலையீடு செய்வது ஐ.நா. கட்டமைப்புக்களுக்கு முறையானதல்ல என சீனா, ரஷ்யா, கியூபா போன்ற நாடுகளின் அரசுக் குழுமங்களை அனுசரணையாக்கி, அத்தலையீட்டை எதிர்கின்றது. சர்வதேச பரப்பில் இவை சிக்கல்கள் தருபவைதான்.

ஸ்ரீலங்கா ஐ.நாவின் பார்வையில் போருக்கு பின்னர் 13 வருடங்கள் ஒரு தீர்வுக்காக காத்திருக்கின்றது. அதன் பின் வேறு பல பிரச்சினைகள் தோன்றின. ஆனால் முக்கியமாக ஆப்கானிஸ்தான் எழுந்தது. இப்பொழுது உக்கிரேயின் வெடித்துள்ளது. இவை புதிய தலையிடிகள்.

அதேசமயம் உக்கிரோயினை ஒட்டி ரஷ்யா எடுத்திருக்கும் யுத்த நடவடிக்கைகளால், சர்வதேசப் பதற்றம் ஏற்பட்டுள்ளது.

மிக அண்மையில், ஐரோப்பிய ஒன்றியத்தின் இந்திய பசுபிக் பிரதேசத்தை ஒட்டிய இந்தியாவின் கண்ணோட்டம் என்ற தலைப்பில் நடந்த ஒன்றிய நாடுகளின் ஒன்று கூடுதலில் பங்கு பற்றி கருத்து தெரிவித்த இந்திய வெளிவிவகார மந்திரி ஜெய்சங்கர், சீனாவுடனான தங்களது பிரச்சினை எல்லை பற்றியதுதான், 1975இல் ஆக்கப்பட்ட ஒப்பந்தத்தில் ஏற்றுக் கொண்ட எல்லைகளை தற்போது சீனா மதிப்பதில்லை, படைகளை அனுப்பி ஊடுருவுகின்றது, எல்லைக் கிராமங்களில் வீடுகள் அமைத்து அந்த மக்களுக்கு பாதுகாப்புத் தருவதாக உத்தரவாதங்கள் தருகின்றது, ஒப்பந்தத்தை இப்படி மீறி சீனா செயற்படுகின்றது. அது சர்வதேச தாங்கங்களை தருகின்றது என்றார்.



ரஷ்யா தற்சமயம் உக்கிரேயினின் இரண்டு மாகாணங்களை தனி நாடாக அங்கீகரித்து அவற்றை பாதுகாக்க படைகள் அனுப்பியது போல், இந்தியாவின் எல்லை மாநிலங்களான மணிப்பூர், நாகலாந்தை சுய உரிமை கோர, சீனா தூண்டி வந்துள்ளது. அவற்றைத் தனி நாடுகளாக அங்கீகரித்து தொல்லைகள் குடுக்கலாம் என்ற ஐயப்பாடுகள் உண்டு.

ஆகவே இவைபோன்ற பிரச்சினைகளும், தமிழ் மக்களை பொறுத்தவரையில், சர்வதேசத்தின் பார்வையில் தாக்கங்கள் தரலாம், ஒற்றையாட்சியின் கீழ் அதிகார பரவலை சமரசமாகக் கடைப்பிடிக்க உந்து சக்தி தரலாம்.




எனவே, தமிழ் மக்களது பிரச்சினைகள் முக்கியமடைந்து, அதிரடி தீர்வுகள் தங்களது அபிலாஷைகளுக்கு ஏற்ப உடனடியாக வர வேண்டும் என நினைத்து தமிழ் மக்கள் இயங்குவது புத்திசாலித்தனமல்ல. வருடங்கள் பல காத்திருந்தாலும், ஸ்ரீலங்காவின் தொடர்ந்த மனோபாவங்களினாலும் அமெரிக்காவும் மனித உரிமை மன்றில் அங்கத்தினராகவும் வருவதாலும் கனமான தீர்மானங்கள் எதிர்காலத்தில் வரக்கூடிய சாத்தியங்கள் உண்டு.

இவற்றை கணக்கெடுத்தே ராஜபக்ஷக்கள் மனித உரிமை மன்றின் தீர்மானங்களைக் காலம் கடத்தி, புதிய அரசமைப்பை நிறைவேற்றிக் கொள்ளத் துடிக்கின்றார்கள்.

**734.ஒன்றையாட்சிதான் சிங்கள பேரினவாதத்தின் தீர்க்கமான முடிவா? அப்படியானால் அதிகாரப் பகிர்வு என்ற பேச்சு அவியுமா? உள்ளக சுயநிர்ணயம் போன்றவற்றை அவர்கள் கணக்கெடுப்பார்களா?**

சோல்பரி ஆணைக்குழுனால் சிறுபான்மை மக்களுக்குப் பாதுகாப்பாகவும், அந்த மக்களுக்கு பாதகமாக பெரும்பான்மையினர் எந்தவொரு சட்டத்தையும் இயற்ற கூடாது என்பதை உறுதிப்படுத்தவும் அதன் அரசமைப்பின் 29ஆம் சரத்தின் மூலம் வழியமைக்கப்பட்டது.

கோடீஸ்வரனது வழக்கில் தனிச் சிங்கள சட்டம், கேள்விக்குறியாக்கபட்டத்தில் (அந்த கேள்விக்கு முடிவை தமிழரசு கட்சியினர் அதி மேன்முறையீட்டு மன்றத்தில் தொடர்ந்து மேலேடுக்கத் தவறிவிட்டனர்) 1972 ஸ்ரீமாவோ பண்டாரநாயக்காவின் அரசு, 29ஆம் சரத்தை வெட்டி ஓடி, மக்களது இறைமையின் பெயரில் புதிய குடியரசு அரசமைப்புச் சட்டத்தை ஆக்கியது. அந்தச் சமயம், தமிழரசு கட்சி இரு மொழிக் கொள்கையையும், சமஷ்டியையும் பிரேரித்து தீர்மானங்கள் வைத்தது. இவை ஏற்றுக் கொள்ளப்படாது. நிராகரிக்கப்பட்டு, ஒற்றையாட்சி முறையே உறுதிப்படுத்தப்பட்டது.



ஜே.ஆர்.ஜெயவர்த்தனா 1978இல் ஒன்றையாட்சியை மேலும் பலப்படுத்த பௌத்தத்திற்கு முன்னுரிமை இடம் தந்து, ஒற்றையாட்சியின் நடைமுறை அதிகாரங்களைத் தனது கைகளில் பொறுப்பேற்றார்.

அவருடைய காலத்தில் இந்திய ஒப்பந்தத்தினால் ஒற்றையாட்சியின் கீழ் 13ஆம் திருத்தத்தின் ஊடாக அதிகாரக் கையளிப்பும் மாகாண சபை முறைகளும் அமுலுக்கு வந்தன.

ஆனால் அவற்றை அமுல்படுத்த விடாமல் தமிழ் மக்களது அரசியலை, சிங்கள பேரினவாதத்துக்குத் துணை செய்தது.

அன்றிலிருந்து சிங்களப் பேரினவாதம் அதனை நீக்கி, சிறுபான்மை இனங்கள் தொடர்பில் எதுவித கரிசனையுமின்றி, அவர்களை ஒதுக்கி, ஒற்றையாட்சியை முற்று முழுதாக பௌத்த –சிங்கள மயமாக்குவதற்கு படிகள் அமைத்தது; அதன் தலைவர்களாக ராஜபக்ஷக்கள் பவனி வந்தனர். அதற்கான படிகளையும் அமைத்தனர். அதன் முதற்படி, இணைந்து அமைக்கப்பட்ட வடக்கு, கிழக்கு மாகாண சபையை நீதிமன்றின் மூலம், பிரித்தது. அடுத்தது சந்திரிகா விடுதலை புலிகளுடன் இணக்கம் கண்டு, இருபகுதிகளும் சேர்ந்து நடைமுறைப்படுத்தவிருந்த சுனாமி கட்டமைப்பை திரும்பவும் நீதிமன்றத்தின் ஊடாக பயனற்றுப் போகச் செய்தது. இன்னுமொரு முக்கியமான படிக்கட்டையும், போர் ஒப்பந்தத்தை முறித்து, போரைத் தொடங்கி ராஜபக்ஷக்கள் கட்டிமுடித்து அதன் தளத்திலேயே போரையும் நடத்தி, பின்னர் சுயநிர்ணயம் என்ற கோரிக்கையையும் மனித உரிமை மன்றில் சமாளிக்கின்றனர். மனித உரிமை மீறல்கள், சுயநிர்ணயப் பிரச்சினை, போர்க்குற்றங்கள் என்பன ஐ.நாவின் முன் வருமென ராஜபக்ஷக்கள் கணித்தே செயல்பட்டுப் போரை நடத்தினார்கள். அழிவுகளை பற்ற. அவர்கள் அக்கறை கொள்ளவில்லை.



(வளரும்)